வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 16.06.2021 புதன்கிழமை | இதழ் : 195 | பக்கங்கள் : 16




# ஜனாதிபதி – கூட்டமைப்பு சந்திப்பு இறுதி வேளையில் ஒத்திவைப்பு!

## தென்னிலங்கை அழுத்தங்களையடுத்து இன்றைய பேச்சு இரத்தானதாக தகவல்!

கொழும்பு, ஜூன் 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவிற்கும் இடையில் இன்று புதன்கிழமை மாலை நடைபெறவிருந்த நேரடி பேச்சு இறுதி நேரத்தில் காலம் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மீண்டும் இந்தப் பேச்சு எப்போது நடைபெறும் என்று பின்னர் அறி விக்கப்படும் என கூட்டமைப்புக்கு நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

15

# 55 பேர் மரணம்

கொழும்பு, ஜூன் 16

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 55 பேருடைய மரணங்கள் நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் மரணமாகினர் என சுகாதார சேவைகள் திணைக்களத்தின்

15

மரணம் அதிகரிப்பு; தொற்று குறைவு

## நிலைமையை கட்டுப்படுத்த இன்னும் 3 வாரங்கள் செல்லும்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கருத்து



கொழும்பு, ஜூன் 16

“இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துள்ள போதிலும், உறுதிப் படுத்தப்படும் தொற்றாளர்

15

## 2,275 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 275 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து இலட்சத்து 28 ஆயிரத்து 197 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 92 ஆயிரத்து 478 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 404 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## முல்லைத்தீவில் குண்டு வெடிப்பு

### பெண்ணொருவர் படுகாயம்



முல்லைத்தீவு, ஜூன் 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வயோதிபப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

அவர் புதுக்குடி

15

## 2 வயது குழந்தைகள் உட்பட வடக்கில் 42 தொற்றாளர்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 16

கரவெட்டியில் 2 வயது குழந்தைகள் இவருவர், முல்லைத்தீவில் 2 வயது குழந்தை ஒன்றுமாக நேற்று வடக்கு மாகாணத்தில் 42 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இவ்வாறு அடையாளம் கணப்பட்டவர்களில் 41 பேர் யாழ்ப்பாணத்தை

15

## கோதுமை மாவின் விலையை அதிகரித்தது பிறீமா நிறுவனம்

### வெதுப்பக உணவு வகைகளின் விலைகளும் உயர்வடைந்தன

கொழும்பு, ஜூன் 16

இலங்கையின் முன்னணி கோதுமை மா விற்பனை நிறுவனமாகிய பிறீமா தனது உற்பத்தி கலவையில் ஒன்றாகிய மில்க் பிராண்ட் என்ற மாவின்விலையை 3 ரூபாய் 50 சதத்தால் அதிகரிப்ப

15

## மக்களின் அதிகரித்த நடமாட்டத்தால் பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்படலாம்

### இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் பயணக் கட்டுப்பாடுகளை மேலும் நீடிக்க வேண்டி ஏற்படலாம் என்று இலங்கை மருத்

15




## மனித உரிமைகள் பேரவை அமர்வில் சீனாவின் சேவையை மறக்க முடியாது

### சீன கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு விழாவில் பிரதமர்



கொழும்பு, ஜூன் 16

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வில் இலங்கையின் சுதந்திரத்திற்காக சீனா செய்த சேவையை நாம் ஒருபோதும் மறக்க முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூறாவது ஆண்டு விழாவில், நேற்றுமாலை காணொலி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உரையின்

15

## இப்படியும் நடக்கிறது...!

மீண்டும் நமது தலைவர்கள் சிலர் நித்திரையால் எழும்பிய மாதிரித் தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட்டும் ரெலோவும் கட்சிக்குள் தமது பிடியை சற்று இறுக்கவேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள் போலும். ஆனாலும், அவர்கள் எந்தக் கட்டத்திலும் கூட்டமைப்பைவிட்டு வெளியேறுவார்கள் என்று யாராவது நம்பினால் அவர்களைவிட முட்டாள்கள் வேறுயாரும் இருக்கமுடியாது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்திற்கு செல்வதற்குக்கூட அவரின் உடல் நிலை அனுமதிக்கவில்லை என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பங்காளிக் கட்சிகளைப் பொறுத்தவரை, கட்சியின் கொறொடா பதவியிலும், பேச்சாளர் பதவியிலும்தான் குறியாக இருக்கின்றன. அந்தப் பதவிகளை வழங்குவதில் சம்பந்தன் ஐயா ஒரு கட்டத்தில் பச்சைக்கொடி காட்டி யிருந்தாரெனவும் அரசல்புரசலாக செய்திகள் வந்தன.

இந்த நிலையில், இவ்வளவு காலமும் அக்கறை காட்டாத இந்த பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், ஏன் திடீர் அக்கறை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்வது சுலபமானதுதான்.

இப்போது சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்திற்கும் வரமுடியாமல் இருக்கின்ற நிலையில், கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலும் சிலர் கண்வைக்கத் தொடங்கியிருக்கின்றனர் என்கின்றன கூட்டமைப்பிற்கு நெருக்கமான வட்டாரங்கள்.

கூட்டமைப்பின் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களில், கூட்டமைப்பு ஆரம்பமான காலத்திலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்டுவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தனும் செல்வம் அடைக்கலநாதனும்தான். அந்த வகையில், சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் இருப்பவர் செல்வம்தான். அவர் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராகவும் இருந்தவர்.

இந்தப் பதவியில் இருந்ததால் செல்வம் இப்போது நல்ல அனுபவத்தைப் பெற்றிருக்கிறார் என்று சுமந்திரனும் ஒருதடவை செல்வத்திற்கு சான்றிதழ் வழங்கியிருந்தார்.

சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்திற்கு செல்லமுடியாத நிலையில் இருக்கின்றபோது, செல்வம் பதில் தலைவராக நியமிக்கப்படுவதில் தவறில்லை என்றே தெரிகின்றது. இந்த நிலையில் மற்றுமொரு தகவலும் காதோடு காதாக வந்தது.

கூட்டமைப்பின் தலைவராகவும் இப்போது இருப்பவர் சம்பந்தன் ஐயாதான். அவருக்கு சமகால பிரச்னைகளை விளங்கப்படுத்துவதே சிரமமாக இருப்பதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், கூட்டமைப்பின் தலைமைப் பதவி குறித்தும் சிலர் இரகசிய காய்நகர்த்தல்களை தொடங்கியிருக்கின்றனர் என்று கூட்டமைப்பிற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டமைப்பு என்றதுமே, தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே எல்லோருக்கும் நினைவுக்கு வரும், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் ஒருவரே கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்து வருவதால், தமிழ் அரசின் தலைவர் மாவையே கூட்டமைப்பின் தலைவராக வரவேண்டும் என்ற கருத்து நிலவினாலும், துரதிர்ஷ்டவசமாக அவர் இப்போது பாராளுமன்றத்திலும் இல்லாத நிலையில், கூட்டமைப்பிற்கு கூட்டுத் தலைமை ஒன்றை நியமிக்கலாம் என்ற கருத்து கட்சியின் சிலர் மட்டத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் தலைவர்களையும் கூட்டுத் தலைவர்களாக நியமிக்கவேண்டும் என்று கட்சிக்குள் சிலர் காய்நகர்த்துகின்றனர் என்று தெரியவருகின்றது.

கூட்டமைப்பில் தமிழ் அரசின் கட்டுமீறிய செல்வாக்கிற்கு எதிராக அப்போது குரல்கொடுத்த சுரேஷ் பிறேமச்சந்திரனும் முன்னர் கூட்டுத் தலைமையையே வலியுறுத்தி வந்தார்.

சம்பந்தன் ஐயா இயங்கக்கூடிய நிலையில் இருந்தபோது அதற்கான தேவை இருக்கவில்லை. ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல.

தனக்குப் பின்னர் கட்சியை வழிநடத்திச்செல்ல உரிய ஏற்பாடுகளை செய்யவேண்டிய நிலையில் சம்பந்தன் ஐயாவும் இருக்கிறார். எப்படியோ, தமிழ் மக்களின் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் கூட்டமைப்பின் எதிர்காலம் என்பது, தமிழ் மக்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது.

அதனை, சரியான நேரத்தில் சரியான முறையில் செய்யவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை.

**- ஊர்க்குருவி.**

# வாழ்வாதாரம் இழந்த கிளிநொச்சி மக்களுக்கு விக்னேஸ்வரன் உதவி!





*கிளிநொச்சி, ஜூன் 16*

கிளிநொச்சியில் பயணத் தடையால் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் உலருணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

பயணத் தடையால் அதிகம் பாதிக்கப்பட்ட பாரதி புரம், மலையாளபுரம், கோணாவில் கிழக்கு, செல்வா நகர், திருவையாறு, பரந்தன், பிரமந்தனாறு, கல்லாறு, சாந்தபுரம், அம்பாள் குளம் ஆகிய பகுதிகளை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உலரு ணவுப் பொதிகளை பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் வழங்கி வைத்தார். இந்த வாழ்வாதார உதவிகளுக்காக பாராளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் ஒரு இலட்சம் ரூபாயையும், சிட்னிவாழ் தமிழ் உறவுகள் சிலரும் நிதிப் பங்களிப்புக்களை வழங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மீன் வியாபாரியிடம் கையூட்டு பெற்ற பொலிஸாருக்கு எதிராக விசாரணை!

*யாழ்ப்பாணம், ஜூன் 16*

கோவிட்-19 நோய்த்தொற்று பயணத்தடைக் காலத்தில் நடமாடும் மீன் வியாபாரிகளுக்கு நல்லூர் பிரதேச செயலாளரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

அதனைப் பயன்படுத்தி மீன் வியாபாரித்தில் ஈடுபட்ட வியாபாரியை அச்சுறுத்தி கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கையூட்டுப் பெற்றுள்ளனர்.

பணத்தை வழங்கிய மீன் வியாபாரி தனது பகுதி கிராம அலுவலகர் ஊடாக நல்லூர் பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர்மட்டத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக கையூட்டுப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை மீன் வியாபாரி அடையாளம் காட்டியுள்ளார்.

மேற்கொண்டு விசாரணைகளை யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பில் இடம்பெற்று வருகின்றன. (ஐ- 3)

# அடுத்த வாரம் நாடு திரும்புகிறார் பஸில் ராஜபக்ஷ



*கொழும்பு, ஜூன் 16*

சிறிலங்கா பொதுஜன பெரமுனையின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் புதன்கிழமை கொழும்பு திரும்புவார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

மே 12 ஆம் திகதி தனிப்பட்ட விஜயமாக அமெரிக்கா சென்ற பஸில் ராஜபக்ஷ ஆறு வாரங்களின் பின்னர் அடுத்த வாரம் கொழும்பு திரும்புகின்றார்.

# பயணக்கட்டுப்பாடு நிறைவுற்றதும் கழிவு தொழிற்சாலை இயக்கப்படும்

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை

*வடமராட்சி, ஜூன் 02*

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் துன்னாலை முள்ளியில் நிறுவப்பட்ட கழிவுப் பொருட்களிலிருந்து சேதனப் பசளை தயாரிக்கும் தொழிற்சாலை பயணக்கட்டுப்பாடு நிறைவுக்கு வந்ததும் இயங்க ஆரம்பிக்கும் என்று சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

ஜெய்க்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 23 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையை விளையாட டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார்.

பசளை தயாரிப்புக்காக வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கிழக்குப் பிரதேசங்களில் உள்ள ஏழு உள்ளூராட்சி மன்றங்கள் இந்தத் தொழிற் சாலைக்க தினமும் கழிவுப்பொருட்களை வழங்கும்.

இந்த சபைகள் ஒவ்வொன்றில் இருந்தும் தினமும் 4,000 கிலோ கழிவு பொருட்களை எதிர்பார்ப்பதாக கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரன் தெரிவித்தார். (ஐ - 2)

# அமைச்சருக்கு கடற்றொழிலாளர் சம்மேளனம் நன்றி தெரிவிப்பு!

*வடமராட்சி, ஜூன் 16*

மீன் பெருக்கத்திறக்காக நடவடிக்கை எடுத்துள்ள மீன்பிடி அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உப தலைவருமான நா.வர்ண குலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கடலில் மீன் இனங்களின் பெருக்கம் மிக மிகக் குறைந்து வருகின்றது என்று மாறி மாறி வந்த அமைச்சர்களுடன் பேசியும் யாரும் அதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது மீன்பிடி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா மீன் பெருக்கத்தை ஊக்கிவிக்கும் முகமாக பழுதடைந்த வாகனங்களை கடலில் போட்டு மீன் உற்பத்தியை ஊக்கிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக தாம் நன்றி தெரிவிப்பதாகக் கூறினார். (ஐ-2)

ஈழநாடு
Eelanadu
16.06.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆனி 02

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சம்பந்தனின் ஆருடம்

அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றமுடியாது. அரசாங்கம் தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நெருக்கடியை சந்திக்கநேரிடும். இவ்வாறு சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் தொடர்பில் அபிப்பிராயம் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். ராஜபக்ஷக்களை ஏற்றுக்கொள்ளாத கூட்டமைப்பினர், எதற்காக அரசாங்கத்தின் எதிர்காலம் தொடர்பில் அக்கறைப்படுகின்றனர்?

ஜனாதிபதி தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷவை தோற்கடிக்கவேண்டும் என்பதில் கூட்டமைப்பு தீவிரமாக செயல்பட்டது. ஆரம்பத்தில் 13 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக கூறிய கூட்டமைப்பினர், இறுதியில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக பகிரங்கமாக அறிவித்தனர். கூட்டமைப்பின் பகிரங்க ஆதரவால் சஜித் பிரேமதாஸ நன்மையடைந்தாரா என்பது வேறுவிடயம்.

தேர்தல் முடிவடைந்ததும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்தவொரு முயற்சியையும் சம்பந்தன் மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில், இலங்கையின்மீதான புதிய பிரேரணையையும் கூட்டமைப்பு ஆதரித்திருந்தது. அதேவேளை, இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துமாறு, மூன்று கட்சிகள் இணைந்து அனுப்பிய கடிதத்திலும் சம்பந்தன் கையெழுத்திட்டிருந்தார். இறுதி யுத்தத்தின்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை விடயம் விவாதிக்கப்பட்டால், முதல் குற்றவாளியாக கோட்டாபய ராஜபக்ஷவே இருப்பார். இந்த நிலையில், அரசாங்கத்தின் எதிர்காலம் தொடர்பில் சம்பந்தன் கருத்துக் கூறுவதன் பொருள் என்ன?

சம்பந்தனின் நிலைமையே இதுவென்றால், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் நிலை என்ன? உண்மையில், கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியின் பின்னர், கூட்டமைப்பினருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கூட்டமைப்பு மட்டுமல்ல, ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்களின் நிலைமையும் இதுதான். அவ்வப்போது சர்வதேச அரங்குகளில் முன்னெடுக்கப்படும் விடயங்களை தங்களின் வெற்றியாக காண்பிக்க முற்படுகின்றனர்.

உண்மையில், ஐரோப்பிய ஒன்றிய பிரேரணைக்கும், கூட்டமைப்பின் இராஜதந்திரத்திற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. அதேபோன்று, ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுக்கும் மேற்படி தீர்மானத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அது, முற்றிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச அணுகுமுறை சாந்த ஒன்றாகும். ஒருவேளை ரணில் ஆட்சியில் இருந்திருந்தால், இவ்வாறானதொரு பிரேரணை வந்திருக்காது. இதிலிருந்து விடயங்களை இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். தற்போதை ஆட்சியாளர்கள் மேற்குலகின் தாராளவாத உலக ஒழுங்குடன் முரண்படுகின்றனர். ஐ. நா மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்க மறுக்கின்றனர். மனித உரிமைகள் மீறல் தொடர்பில் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிராகரிக்கின்றனர். இவ்வாறான காரணங்களினால்தான், ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

இதுபோன்ற பல அழுத்தங்களை கோட்டாபய அரசாங்கம் முகம்கொடுக்க நேரிடும். இதிலிருந்து தப்புவது கடினம். மேற்குலகத்துடன் ஒத்துழைத்தால் தப்பலாம். எனவே, அரசாங்கத்தின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும். இதில் தமிழ் தேசிய கட்சிகள் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே! தமிழ் தேசிய கட்சிகள் மௌனமாக இருந்தாலும் இவ்வாறான தீர்மானங்கள் வந்தே தீரும்.

# சுவாலைவிட ஆரம்பிக்கும் எரிபொருள் விலை உயர்வு!

- அலசுவது இராஜதந்திரி -

*அரசின் பங்காளிக் கட்சிகளே அதிருப்தியடையும் விதத்தில் தற்போது நாட்டின் பொருளாதார நிலவரம் மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.*

*இரு தினங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதையடுத்து அதுசார்ந்த அனைத்து பொருட்களும் விலை அதிகரிப்புக்குள்ளாகி, நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கச்செய்யும் நிலையே ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கோவிட்-19 பிரச்னை காரணமாக முழு நாடுமே பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. கடந்த இரு வருடங்களாக கோவிட்-19 பிரச்சினை காரணமாக நாட்டின் பிரதான துறைகள் முடங்கிப்போயுள்ளன.*

*இத்தகைய சூழ்நிலையிலேயே தற்போது எரிபொருள் விலையேற்றம் ‘பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த’ கதையாக, நாட்டின் பொருளாதாரத்தை பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.*

*சிறு வியாபாரிகள், மற்றும் ஏற்றுமதி, இறக்குமதியாளர்களென அனைத்துத் தரப்பினரும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.*

*இத்தகைய நெருக்கடியான நிலையிலேயே எரிபொருள் விலையேற்றமும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது.*

**உதய கம்மன்பிலவுக்கு ஆதரவு**

*எரிபொருள் விலையேற்றம் குறித்து எரிபொருள்துறைக்கு பொறுப்பான அமைச்சர் உதய கம்மன்பிலமீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளும் அக்கட்சிகள் சார்பாக அமைச்சர்களாக இருப்போரும் எரிபொருள்துறை அமைச்சர் உதய கம்மன்பில எரிபொருள் விலையேற்றம் குறித்து குற்றம் சாட்டப்படுவது சம்பந்தமாக தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார். இக் கண்டனத்தை நோக்கும்போது, எரிபொருள் விலையேற்றம் காரணமாக அமைச்சர் உதய கம்மன்பில ஆட்சியின் உயர் பீடத்திலிருப்போரால் ‘பலிக்கடா’ ஆக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இதனை உதய கம்மன்பிலவும் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமமந்திரி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையின் பேரிலேயே எரிபொருள் விலை உயர்வை தாம் மேற்கொண்டாரென கம்மன்பில தெரிவித்துள்ளார்.*

**கோவிட் -19 பாதிப்பு**

*கோவிட்-19 அச்சுறுத்தல் இலங்கையை மட்டுமல்ல. முழு உலகையுமே வெகுவாக பாதித்துவிட்டுள்ளது. உலகின் முன்னணி நிறுவனங்கள் எதிர்காலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடி சர்வதேச ரீதியாக ஏற்படலாம் என்று எச்சரித்துள்ளன. இந்நிலையில், உலகின் பல முன்னணி நாடுகள் பொருளாதார பின்னடைவுகளை சந்திக்கும் விதத்தில் செயல்திட்டங்களை ஆரம்பித்துள்ளன. ஆனால், இலங்கை ‘எரிகிற வீட்டில் எண்ணெய் வார்ப்பது’போல, ஏற்கனவே நெருக்கடிக்குள்ளாகியுள்ள பொருளாதாரத்தை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது.*

*இன்றைய ஆட்சியாளர்களால் மட்டுமல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலம்முதல் ஆட்சிக்கு வந்த அனைத்துத் தரப்பினரும் எவ்வகையிலும் காத்திரமான பொருளாதாரத் திட்டத்தை கொண்டிருக்கவில்லை. பத்து வருடங்களுக்கு முன்னர் வடக்கு-கிழக்கு யுத்தம் முறுக்கேறியிருந்த வேளை நாட்டின் அனைத்து வளங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.*

**யுத்தச்செலவு**

*யுத்தச் செலவீனம் என்று கூறிக்கொண்டு பெருந்தொகைப்பணம் ஆயுதப் படையினரின் பராமரிப்பு மற்றும் ஆயுத தளபாடங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. இந்த செலவீனங்களின்போது பல மோசடிகளும், ஊழல்களும் இடம்பெற்றிருந்தன. இராணுவத்தினருக்கு சப்பாத்துகள் கொள்வனவு செய்வது, இறைச்சி வகை உட்பட உணவுவகைகளை விநியோகிப்பது, ஆயுத தளபாடங்கள் கொள்வனவு என அனைத்து வகையிலும் யுத்தத்தை ஆதாரம் காட்டி ஊழல், மோசடிகள் பாரிய அளவில் இடம்பெற்றிருந்தன.*

*ஆனால், இப்போது யுத்தம் முடிவுற்று பத்து வருடங்களாகியுள்ளபோதிலும், பொருளாதார நிலவரம் மிகப் பாதிப்புக்குள்ளானதாகவே இருக்கின்றது. சர்வதேச சந்தையில் எரிபொருள் விலையேற்றம் காரணமாகவே இலங்கையிலும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகின்றது.*

*ஆனால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலையேற்றம் என்பது, உலகின் அனைத்து நாடுகளுக்கும் உரித்தானதாகவே இருக்கின்றது. ஆனால், சர்வதேச சந்தையில் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றம் ஏதோ இலங்கைக்கு மட்டும் உரித்தானதுபோலவே அரச தரப்பினர் தமது கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.*

*ஏனைய நாடுகள் எரிபொருள் விலையேற்றம்போன்ற நெருக்கடிநிலை ஏற்படும்போது தமது பொருளாதார நிலவரங்கள் உறுதியாக இருக்கும் விதத்தில் செயல்திட்டங்களை வகுத்து வைத்துள்ளன. ஆனால், இலங்கையில் ஆட்சியதிகாரங்களில் இருப்போருக்கு அதிநவீன சொகுசு வாகனங்கள் தற்போதைய நெருக்கடியான காலகட்டத்திலேயே பல கோடிக்கணக்கான செலவில் வாங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது.*

*எனவே, தற்போதைய எரிபொருள் விலையேற்றம் அரசுக்குள்ளளேயே அதிருப்தியை ஏற்படுத்தி விட்டுள்ள நிலையில், அரசியல் அரங்கில் எரிபொருள் விலையேற்றம் சுவாலைவிட ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இச்சுவாலை விரிவடையும் பட்சத்தில், அரசினால் அதன் ‘அனல் காற்றை’ எவ்வளவு தூரம் தாக்குப்பிடிக்கமுடியுமென்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜூன் - 16 புதன்கிழமை**
பிலவ வருடம் - ஆனி 2
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : சூன்ய




**மேடம்**
நினைத்தது நிறைவேறும். உடல் நலம் சீராக இருக்கும்.முயற்சிகள் வெற்றிபெறும் நாள். தொந்தரவு குறையும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். பணிச்சுமை சற்று கூடும்.

**இடபம்**
புது முயற்சி பற்றிய சிந்தனை வடிவம் பெறும். புதிய வேலைவாய்ப்பை நோக்கி இருப்பவர்களுக்கு பதில் தாமதமாகும். குடும்பத்துடன் அதிக நேரம் செலவு செய்ய முடியாமல் போகலாம்.

**மிதுனம்**
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும்.விசா தொடர்பான முயற்சிகளை துவக்குவதற்கு உகந்த நாள். பணி பற்றிய நன்மை எதிர்நோக்குபவர்களுக்கு நல்ல தகவல் உண்டு.

**கடகம்**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். சமீபத்திய பயங்கள் நீங்கும். பாடுபட்டுப் பணிகளை முடித்து மகிழ்ச்சி காண்பீர்கள். இன்று மெயிலில் வரும் தகவல் உற்சாகப்படுத்தும்.

**சிம்மம்**
மாலை நேரத்துக்குப் பிறகு மன நிம்மதி ஏற்படும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்களும் தோன்றி மறையும் நாள். பெண்களுக்கு பணிச்சுமை ஏற்படும். வியாபாரிகள் உயர்வர்.

**கன்னி**
நிதி விஷயங்களில் ஏமாற்றம் உண்டாகக்கூடும். எதிர்பாலினத்தைச் சேர்ந்த ஒருவரால் வருத்தம் ஏற்படக்கூடும். இயந்திரப் பணியில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**துலாம்**
பிரச்னைகளை சமாளிக்கப் பாடுபட வேண்டியிருக்கும். குழந்தைகளின் போக்கினால் ஏற்பட்டிருந்த கவலை நீங்கும். பணி இடமாற்றம், பதவி உயர்வு தாமதமாகலாம்.

**விருட்சிகம்**
தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உற்றார் உதவுவர். குழந்தைகளின் போக்கில் மகிழ்ச்சியளிக்கும் மாற்றம் இருக்கும். வெளிநாடு சம்பந்தமான முயற்சிகளில் முன்னேற்றம் இருக்கும்.

**தனுசு**
குழந்தைகள் முன்னேற்றம் பற்றிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். பணியாளர்களின் விருப்பம் நிறைவேறும். நட்பு பலப்படும். எதிர்ப்பு காட்டுவோரிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**மகரம்**
குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவுகளை நீடிக்க விட வேண்டாம். அதிக முயற்சி செய்தாலும் சிறு வெற்றிகளையே காண்பீர்கள். குடும்பத்தில் நிலவிய மனப்புழுக்கம் மறையும்.

**கும்பம்**
பொறுமைக்குப் பரிசு கிடைக்கும். பொறுப்பு கூடும். அவசியப் பொருட்களை வாங்கிய மகிழ்ச்சி கிடைக்கும். பணியாளர்களுக்குச் சரியான வழிகாட்டி கிடைப்பர்.

**மீனம்**
தாயாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு தீர்ந்துவிடும். நெருங்கிய நண்பரின் சண்டையைப் பொருட்படுத்த வேண்டாம். பணியாளர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறத் தாமதமாகலாம்.

# சசிகலாவுடன் பேசிய 15 பேர் அ.தி.மு.கவிலிருந்து நீக்கம்

## யாரும் தடுக்க முடியாது என சசிகலா அறிவிப்பு

சென்னை, ஜூன் 16

சசிகலாவுடன் பேசியதற்காக அ.தி.மு.கவிலிருந்து நேற்று முன்தினம்15 பேர் அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில், சசிகலா பேசும் மற்றொரு குரல் பதிவு நேற்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழகத்தில் நேற்று முன்தினம் அக்கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது. இதில், எதிர்க்கட்சித் துணைத் தலைவராக ஓ.பன்னீர்செல்வம், கொறடாவாக எஸ்.பி.வேலுமணி உள்ளிட்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில், சசிகலாவிடம் பேசியவர்களைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முன்னாள் அமைச்சர் ஆனந்தன் உட்பட 15 பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். அதுபோன்று அதிமுக செய்தித் தொடர்பாளர் புகழேந்தியும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்படுகிறார் என ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ் இருவரும் அறிவித்தனர்.



இந்த நிலையில், சசிகலா பேசும் மற்றொரு குரல் பதிவு நேற்று வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை அதிமுக நிர்வாகி குபேந்திரனிடம் பேசும் சசிகலா, ‘கவலைப்படாதீங்க... தைரியமாக இருங்கள் விரைவில் உங்களை வந்து சந்திக்கிறேன். கட்சியை மீண்டும் நல்ல வழியில் கொண்டு வருவோம், அதை யாராலும் தடுக்க முடியாது.

இது போன்று எத்தனையோ நான் பார்த்திருக்கிறேன். 1987 ஆம் ஆண்டு தலைவர் மறைவின் போது, ஏற்பட்ட பிரச்னையை அம்மாவுடன் இருந்து பார்த்திருக்கிறேன். அதில் இருந்து மீண்டு வந்துதான் ஆட்சிக்கு வந்தோம். அதுபோன்று மீண்டும் நடக்கும்.

இவர்கள் செய்வது எல்லாம் புதிது அல்ல. ஜெயலலிதா போல நாமும் தொண்டர்களுடன் வந்து காட்டி, ஆட்சியை அமைப்போம்” என்று கூறியுள்ளார்.

# சிவசங்கர் பாபாவை கைது செய்ய தனிப்படை டேராடூன் விரைவு

சென்னை, ஜூன் 16

தமிழகத்தில் சென்னையை அடுத்துள்ள கேளம்பாக்கம் சுஷில் ஹரி பள்ளி நிர்வாகி சிவசங்கர் பாபாவை கைது செய்ய சிபிசிஐடி தனிப்படை பொலிஸார் உத்தரகாண்ட் மாநிலம் டேராடூன் விரைந்துள்ளனர்.

கேளம்பாக்கத்தில் செயல்பட்டு வரும் சுஷில் ஹரி பள்ளியின் நிறுவனர் சிவ சங்கர் பாபா மீது அப்பள்ளியின் முன்னாள் மாணவிகள் சமூக வலைதளத்தில் பாலியல் புகார் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து, மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் கடந்த 11 ஆம் திகதி சிவசங்கர் பாபா உள்ளிட்ட பள்ளி நிர்வாகிகள் 6 பேரும் நேரில் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பியது.

இதனையடுத்து, சென்னையில் உள்ள குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தில், 3 பேர் நேரில் ஆஜராகினர். ஆனால், சிவசங்கர் பாபா உட்பட 3 பேர் ஆஜராகவில்லை. சிவசங்கர் பாபா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக கூறி அவருக்கு பதிலாக வழக்கறிஞர் ஆஜராகினர். இதனைத் தொடர்ந்து பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக வந்த புகாரில் கேளம்பாக்கம் பொலிஸார் சிவசங்கர் பாபா மீது போக்சோ உள்



ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் நேற்று முன்தினம் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில், பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்த புகாரில் சிக்கியுள்ள சுஷில் ஹரி பள்ளி நிர்வாகி சிவசங்கர் பாபா உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக சிபிசிஜடிக்கு தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து சிவசங்கர் பாபாவை கைது செய்ய தனிப்படை டேராடூன் விரைந்துள்ளனர். சிவசங்கர் பாபா வெளிநாடு தப்பிச்செல்லாமல் இருக்க விமான நிலையங்களுக்கு அறிவித்தல் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# இன்று டில்லி செல்கிறார் ஸ்டாலின் மோடியுடன் நாளை முக்கிய பேச்சு

சென்னை, ஜூன் 16

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக மு.க.ஸ்டாலின் முக்கிய பேச்சு ஒன்றுக்காக இன்று இந்தியத் தலைநகர் புதுடில்லி செல்கிறார். பிரதமர் நரேந்திர மோடி உட்பட முக்கியஸ்தர்கள் பலரை அவர் டில்லியில் சந்திக்கின்றார்.

இன்று மாலை சென்னையில் இருந்து சிறப்பு விமானத்தில் டில்லி செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அங்குள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதன் பின்னர் நாளை 17 ஆம் திகதி முதல் பல்வேறு நிகழ்ச்சிகளில் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். தொடர்ந்து 3 நாட்கள் டில்லியில் தங்கி இருக்கும் அவர் தமிழகத்துக்கு தேவையான திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து பிரதமர் மற்றும் மத்திய மந்திரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

நாளை காலை டில்லி லோக் கல்யாண் மார்க் பகுதியில் உள்ள பிரதமர் இல்லத்தில் பிரதமர் மோடியை, முதலமைச்சர் ஸ்டாலின் சந்தித்து பேசுகிறார். இந்த சந்திப்பின் போது 35 முக்கிய விஷயங்கள் பற்றி பிரதமருடன் ஸ்டாலின் பேச உள்ளார்.

இந்த சந்திப்பின் போது பிரதமர் அலுவலக அதிகாரிகள், தமிழக தலைமைச் செயலாளர் இறையன்பு உள்ளிட்டோரும் உடன் இருப்பார்கள். மோடி- ஸ்டாலின் இடையே நிர்வாக ரீதியாக நடைபெறும் இந்த சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடிக்கும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன் பின்னர் பிரதமர் மோடியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் தனியாக சந்தித்து பேசுகிறார்கள். இந்த சந்திப்பு 10 நிமிடங்கள் வரை நடைபெறும் என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது.



# உயிரிழந்த திமிங்கிலம் யாழில் ஒதுங்கியது!

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஊர்காவற்துறை - சுருவில் கடற்கரையில் இறந்த நிலையில் திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

32 அடி நீளமான கரையொதுங்கிய குறித்த திமிங்கலத்தை நேற்று காலை 8.30 மணியளவில் மீனவர்கள் கண்டுள்ளனர்.

தொடர்ந்து மீனவர்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த திணைக்கள அதிகாரிகளும் வருகை தந்தனர்.

குறிப்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் திமிங்கலம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டனர். (03)

# வாக்களிப்பது போன்று தடுப்பூசி பெறுவதிலும் அக்கறை வேண்டும்

## இலங்கை மருத்துவர் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஜூன் 16**

**தேர்தல் காலப்பகுதிகளில், நடமாட முடியாத வயோதிபர்கள் மற்றும் நோயாளர்களை கதிரைகளில் வைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கு தூக்கிச் செல்வதை போன்று, தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்கும் அக்கறை காட்டுமாறு இலங்கை மருத்துவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பயணக்கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் மக்களின் நடத்தையை அவதானிக்கையில், அதன் சாதகமான பெறுபேற்றை பெறமுடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று சுகாதாரப் பிரிவினரால் மாத்திரம் கட்டுப்படுத்தக் கூடியதொன்றல்ல எனவும் அதற்கு மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்றும் மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் பரவிவரும் டெல்டா கொரோனா திரிபு மிகவும் ஆபத்தானதொன்றெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இதனை நாட்டுக்குள் பரவவிடாமல் தடுப்பதற்கு விமான நிலையம், துறைமுகம் போன்ற இடங்களில் மிகவும் அவதானமாக செயபடவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறே கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்களை தொடர்பு கொள்ளாதிருப்பதன் மூலம் இந்த வைரஸ் திரிபு நாட்டுக்குள் நுழைவதை தடுத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# கொரோனா தொற்றாளர்களில் 54 வீதமானோர் நீரிழிவு நோயாளர்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் இதுவரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டவர்களில் 54.9 சதவீதமானோர் நீரிழிவு நோயாளர்கள் எனவும் இவ்வாறான தொற்றா நோய்களுடன் கோவிட் தொற்றுக்கு உள்ளாகுபவர்களுக்கும் , ஏனைய நோயாளர்களும் சிகிச்சை வழங்கும் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படாவிட்டால் இந்தியாவை விட அதிகளவான மரண வீதம் பதிவாவதை தவிர்க்க முடியாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகிறது. இருந்தாலும் மரணங்கள் பதிவாகும் வீதம் நாம் எதிர்பார்த்தளவிற்க குறைவடையவில்லை. எனவே தொற்றாளர்களை பராமரிக்கும் செயல்திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சிடம் கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# 5 டிஜிற்றல் பூங்காக்களை நிர்மாணிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 16

டிஜிற்றல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளுக்கு இளைஞர்களை உள்வாங்கும் நோக்கத்துடன் இலங்கையில் ஐந்து டிஜிற்றல் பூங்காக்களை நிர்மாணிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அதன்படி, காலி, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இந்த பூங்காக்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சரும் டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன மேம்பாடு இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# பாண் தவிர்ந்த வெதுப்பக பொருட்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 16

பாண் தவிர்ந்த ஏனைய அனைத்து வகையான வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உரிமையாளர்களினால் இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் பனிஸ் உட்பட அனைத்து வெதுப்பக வகை பொருட்களும் 5 ரூபா முதல் 10 ரூபா வரை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை வரும்

கொழும்பு, ஜூன் 16

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்த பின்னர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று கட்சித் தலைவர் கூட்டம் இடம்பெற்றது.

இந்நிலையில், அடுத்த பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஒன்லைனில் மதுபானங்களை பெற அனுமதிக்கும் முன்மொழிவு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 16

'ஒன்லைன்' மூலம் மதுபானங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை நுகர்வோருக்கு வழங்கும் திட்டம் நிதியமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை கலால் திணைக்களத்தின் பேச்சாளர் கபில குமார சிங்க தெரிவித்தார்.

பல்பொருள் அங்காடிகளில் இருந்து ஒன்லைனில் மதுபானத்தை பெருகொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்துள்ளனர்.

எனவே, இந்த பரிந்துரைகள் ஏற்கனவே நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் நிபந்தனையுடன் கூடிய அனுமதி வழங்கப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா நகரசபை தலைவர் நேற்று பிணையில் விடுதலை!

வவுனியா, ஜூன் 16

வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் வவுனியா நகரில் அமைந்துள்ள வாடிவீடு வளாகத்துக்கு சென்ற நகரசபைத்தலைவர் அதற்கு 'சீல்' வைத்திருந்தார்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியருடன் தலைவர் முரண்பட்டாரென தெரிவித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்று நகரசபை தலைவர் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராக மட்டு. மீனவர், விவசாயிகள் நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 16

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கித்துள் பகுதியில் பயணத்தடை காலத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்டவிரோத மண் அகழ்வுகள் காரணமாக மீனவர்கள் மற்றும் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கித்துள் பகுதியில் வடிச்சல் ஆற்றை ஊடறுத்து உழவு இயந்திரம் மற்றும் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் தமது மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்து கித்துள் வடிச்சல் ஆற்றுப்பகுதியில் நேற்று மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 30 மீனவர்கள் விவசாயிகள் குறித்த ஆற்றுப் பகுதியில் சமூக இடைவெளியைப் பேணி தமது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த ஆற்றை ஊடறுத்து இரவு - பகலாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் தாம் தொழிலுக்கு ஆற்றைக் கடந்து செல்ல பெரிதும் சிரமப்படுவதாகவும் ஆற்றுப்பகுதி ஆழமாகி செல்வதாகவும் தெரிவிக்கும் மீனவர்கள் தாம் செல்லும் வீதியும் நாசமாகியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தாங்கள் மண் அகழ்வில் ஈடுபடுவோரிடம் ஏதும் கேட்டால் அவர்கள் தங்களை தாக்குவதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக இந்த பிரச்னையை எதிர்நோக்கி வருவதாகவும் மீனவர்கள், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவை முறையிட்டும் தடுக்க முடியாதுள்ளதாக குற்றம் சாட்டும் மீனவர், விவசாயிகள், தமது பிரச்னை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் கித்துள் வடிச்சல் ஆற்றுப்பகுதியால் இடம்பெறும் மணல் அகழ்வை நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 9 மாவட்ட வைத்தியசாலைகள் மத்திய சுகாதார அமைச்சின் கீழ்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 16

மாகாண சபைகள் ஊடாக நிர்வகிக்கப்படும் தெரிவுசெய்யப்பட்ட 9 மாவட்ட பொது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாத்தளை, நாவலப்பிட்டி, எம்பிலிபிட்டிய, அவிசாவளை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்ட பொது வைத்தியசாலைகளே மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன. (இ)

# மாகாண வைத்தியசாலைகளை சுவீகரிப்பது அதிகார பரவலாக்கலை கேலிக்கூத்தாக்கும்

## புளொட் தலைவர் சித்தார்த்தன் கடும் கண்டனம்



**யாழ்ப்பாணம், ஜூன் 16**

**மாகாண நிர்வாகங்களுக்குட்பட்ட ஒன்பது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவதென எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவு அதிகார பரவலாக்கலை கேலிக்கூத்தாக்கும் ஒரு செயல் என புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

மாகாண நிர்வாகங்களுக்குட்பட்ட ஒன்பது வைத்தியசாலைகளை பறித்தெடுக்க அரசு மேற்கொண்டுள்ள தீர்மானத்தை கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண நிர்வாகங்களுக்கு உட்பட்ட ஒன்பது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான அமைச்சரவை முடிவு நேற்று எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவின்படி, வட மாகாணத்திலிருந்து நான்கு வைத்தியசாலைகள் மத்திய சுகாதார அமைச்சினால் பொறுப்பேற்கப்படவுள்ளன.

மாகாணங்களின் அதிகாரங்களை சிறிது சிறிதாக பறித்தெடுக்கும் அரசின் இரகசிய நோக்கத்தை இந்த நடவடிக்கை தெளிவாக வெளிக்காட்டுகிறது. முக்கியமாக வடக்கு - கிழக்கிலுள்ள நிறுவனங்களை கையகப்படுத்தி இந்த மாகாண சபைகளை அதிகாரமற்ற அமைப்புக்களாக மாற்றுவதுடன் மாகாண சபைகளையும் செயலிழக்கச் செய்யும் நோக்கமிருக்கிறது.

இதேபோல தேசிய பாடசாலைகளை உருவாக்கி மாகாண கல்வியமைச்சை செயலிழக்கச் செய்து, கையகப்படுத்த அரசு முயற்சித்து வருகிறது. அரசின் இந்த நடவடிக்கை அதிகார பரவலாக்கலை கேலிக்கூத்தாக்குவதுடன், இனப்பிரச்னை தீர்விற்கு தாம் தயாரில்லையென்ற செய்தியையே வெளிப்படுத்துகிறார்கள். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்"என தெரிவித்துள்ளார்.

### சிறுமியை சீரழிக்க முயன்ற இரண்டு சிறுவர்கள் கைது!

வாழைச்சேனைம் ஜூன் 16

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பிரதேசத்தில் 7 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட 12, 14 வயதுடைய இரு சிறுவர்களைக் கைது செய்துள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிராமம் ஒன்றில் சம்பவ தினமான நேற்றுமுன்தினம் மாலை குறித்த சிறுமியின் தாயார் அருகிலுள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற நிலையில், குறித்த சிறுமி வீட்டில் தனிமையில் இருந்தபோது, அந்தப் பகுதியைச் சேர்ந்த 12, 14 வயதுடைய இரு சிறுவர்கள் வீட்டினுள் புகுந்து சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இதையடுத்து, சிறுமி பெற்றோரிடம் தனக்கு நேர்ந்ததைத் தெரிவித்ததையடுத்து அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். குறித்த இரு சிறுவர்களையும் பொலிர் கைது செய்ததுடன், சிறுமியை வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.(இ)

# தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்தால் மாத்திரமே அடுத்த வாரம் பயண தடை நீக்கம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 16

"இந்த வாரம் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்தால் மாத்திரமே அடுத்த வாரம் பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் முடிவு எடுக்கப்படும்."

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இந்த வாரம் பெறப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளை அடிப்படையாக வைத்துத்தான் அடுத்த வாரம்



முதல் பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

தற்போது நாடு முழுவதும் நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளின் உண்மையான பிரதிபலனை இன்னும் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களில் அறிந்துகொள்ள முடியும்.

இதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எதிர்காலத்தில் விரைவான அன்ரிஜென் பரிசோதனைக்குப் பின்னர் விடுவிக்கப்படுவார்கள்.

அதேபோல், விரைவான அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதால் மிகவும் ஆபத்தான தரப்பினருக்கு மாத்திரம் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள முடியும்" - என்றார். (இ)

# போதைப்பொருள் கடத்தல் பின்புலத்தில் 'ஹரக் கட்டா'

கொழும்பு, ஜூன் 16

வெலிகம கடற்பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தலானது டுபாயிலிருந்து வழிநடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தன என்பவரால் இந்தப் போதைப்பொருள் கடத்தல் வழிநடத்தப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் போதைப்பொருள் கடத்தல் நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தப் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்கள் தொடர்பில் தற்போது தகவல்கள் கிடைத்து வருகின்றன எனவும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெலிகம கடற்பிராந்தியத்தில் சுமார் 219 கிலோகிராம் ஹெரோயினுடன் பாதுகாப்புப் பிரிவினரால் 12 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 200 கோடி ரூபாய்க்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# நிவாரணம் கோரி வெளிஓயா மக்கள் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம்

ஹற்றன், ஜூன் 16

தனிமைப்படுத்தலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஹற்றன், வெளிஓயா மேல்பிரிவு மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு கோரி நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தோட்ட முகாமையாளர் மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பிலும் அதிருப்தி வெளியிட்டனர்.

வெளிஓயா பகுதியில் 6 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். சுமார் 950 பேர் பெருந்தோட்டத்துறையில் தொழில் புரிகின்றனர்.

இப்பகுதிக்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாட்களில் அரசால் வழங்கப்படும் நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும், 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவும் எட்டாக் கனியாகவே உள்ளது எனவும்



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தோட்ட நுழைவாயிலில் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். அனுமதி பெற்றவர்கள் கூட வெளியேற முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இப்பகுதியில் உள்ள கூட்டுறவு நிலையங்களிலும் பொருட்களின் விலை அதிகமாக உள்ளது. எனவே, விலை குறைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தனிமைப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் நோயாளிகள்கூட வெளியில் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

ஒரு மாதத் தனிமைப்படுத்தலுக்குப் பின்னர் நேற்றே இப்பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மட்டக்களப்பில் மேலும் ஒருவர் கொரோனா தொற்றுக்கு பலி!

மட்டக்களப்பு, ஜூன் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் மேலும் ஒருவர் உயிரிழந்தமையை அடுத்து, மரணமானோர் தொகை 58 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 97 பேர் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக நேற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

கொரோனா வைத்தியசாலையின் சிகிச்சை பெற்று வந்த நிலையில் களுவாஞ்சிகுடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

அதேவேளை மாவட்டத்தில் தொடர்ந்து அன்டிஜன் மற்றும் பிசிஆர் பரிசோதனைகள் எழுமாறாக இடம்பெற்று வருகின்றது இந்த நிலையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் கீழ் உள்ள சுகதார வைத்திய அதிகாரி பிரிவுகளான மட்டக்களப்பில் 11 பேரும், களுவாஞ்சிக்குடியில் 03 பேரும், வாழைச்சேனையில் 08 பேரும், காத்தான்குடியில் 11 பேரும், ஓட்டமாவடியில் ஒருவரும், கோறளைப்பற்று மத்தி 11 பேரும், செங்கலடி ஒருவரும், ஏறாவூர் 26 பேரும், வாகரை 02 பேரும், பட்டிப்பளை 05 பேரும், ஆரையம்பதி 09 பேரும், வெல்லாவெளி 08 பேரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட்ட 97 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது .

இதேவேளை கொரோனா தொற்று மூன்றாவது அலை கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி ஆரம்பித்த நிலையில் இதுவரை 49 பேர் உயிழந்தமையை அடுத்து மாவட்டத்தில் கொரோனா தொற்றால் 58 பேர் உயிரிழந்தாரென அவர் தெரிவித்தார்.

## வங்காலை கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கிய கடலாமை



மன்னார், ஜூன் 16

மன்னார் நானாட்டான் பிரதேசச் செயளாலர் பிரிவுக்குற்பட்ட வங்காலை கடற்கரையில் நேற்று செவ் வாய்க்கிழமை காலை உயிரி ழந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள் ளது.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்ப லில் இருந்து வெளியேற்றப் பட்ட ஆபத்தான பொருட்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருட்கள் மன்னார் வங் காலை கடற்கரை மற்றும் சிலா பத்துறை கடங்கரையில் கரையொதுங்கியது.

இந்த நிலையில் ஓடுகள் கடுமையாக சிதைவுற்ற நிலை யில் கடலாமை ஒன்று உயிரி ழந்த நிலையில் வழங் காலை கடற்கரையில் கரையொ துங்கியுள்ளது. கடந்த வாரம் சிலாபத்துறை கடற்கரையிலும் உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரை ஒதுங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ் பொறுப்பதிகாரியாக மேனகா மூக்காண்டி நியமனம்

கொழும்பு, ஜூன் 16

சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி மேனகா மூக்காண்டி, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகா ரியாகவும் பிரதிப் பணிப்பா ளராகவும் நியமிக்கப்பட் டுள்ளார்.

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி மேனகா மூக்காண்டி, இலங்கை இத ழியல் கல்லூரியில், துறைசார் கல்வியைக் கற்றவராவார்.

15 வருட கால தனது ஊடக வாழ்வில் ஊடகவியலாளரா கவும் செய்தி ஆசிரியராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.



ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக திருமதி மேனகா மூக்காண்டி நியமனம் பெறுவதற்கு முன்னர் 'தமிழ் மிரர்' பத்திரிகையின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றி னார். (இ)

# இலங்கை தமிழ் அகதி குடும்பம் கிறிஸ்மஸ் தீவிலிருந்து விடுதலை

### பெர்த் 'சமூக தடுப்பு முகாமில்' தங்கவைக்க திட்டம்

பெர்த், ஜூன் 16

சர்வதேச அழுத்தங்களுக்குப் பிறகு கிறிஸ்மஸ் தீவில் வைக் கப்பட்டிருந்த இலங்கை தமிழ் அகதி குடும்பத்தை அங்கிருந்து நேற்று விடுவித்திருக்கிறது அவுஸ்திரேலிய அரசு.

அவுஸ்திரேலியாவின் பெர்த் நக ரில் இந்த குடும்பத்தினர் ஒன் றாக தங்க அனுமதிக்கப்படு வார்கள். அங்கிருந்தவாறு தங் களுக்கு முறையான குடியுரிமை வழங்கக் கோரி அவர்கள் நீதி மன்றத்திலும் வழக்காட முடி யும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பில்லோவீலா குடும்பம் என்று அழைக்கப்படும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 4 வயது தாருணிகா உடல்நலக்குறைவு காரணமாக கடந்த வாரம் கிறிஸ்மஸ் தீவில் இருந்து பெர்த் நகருக்குக் கொண்டு வரப்பட்டார். அவருடன் தாய் பிரியாவும் வர அனுமதிக்கப் பட்டார். தாருணிகாவின் தந்தை நடேஸ், மூத்த மகள் கோபிகா ஆகியோரும் பெர்த் நகருக்கு அழைத்து வரப்படு வார்கள் என்று அவுஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் அலெக்ஸ் ஹாக் தெரிவித்துள் ளார்.

கடந்த ஒரு வாரமாக இந்த குடும்பத்தினர் தனித்தனியே இருக்க நேர்ந்தது. இனி அவர் கள் பெர்த்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான "சமூக தடுப்பு முகாமில்" தங்க வைக்கப் படுவார்கள். அங்கு அவர்கள் கண்காணிக்கப்பட்டாலும் சுதந் திரமாக நடமாட அனுமதி உண்டு.



முன்னதாக, அவர்கள் அவுஸ் திரேலியாவுக்கு வெளியே உள்ள கிறிஸ்மஸ் தீவில் உள்ள அகதிகள் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டி ருந்தார்கள். சுற்றுச் சுவரைக் கொண்ட இந்த முகாமில் எப்போதும் காவலர்கள் கண்காணித்துக் கொண்டிருப் பார்கள்.

தீவில் இருந்தபோது, தாருணிகாவுக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டதாகவும் கிறிஸ்மஸ் தீவில் சிகிச்சைய ளிக்கத் தாமதம் ஏற்பட்ட தாகவும் குடும்பத்தினர் கூறு கிறார்கள். கடந்த சில நாள்க ளாக நடேஸ் குடும்பம் நடத் தப்படும் விதத்தைக் கண்டித்து அரசுக்கு எதிராக சிட்னி, மெல்பர்ன் உள்ளிட்ட அவுஸ் ரேலிய நகரங்களில் போராட் டங்கள் நடைபெற்றன.

இந்த நிலையில் அவர்கள் கிறிஸ்மஸ் தீவில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், "இது வீசா பெறுவதற்கான வழியை உருவாக்காது" என்று அமைச்சர் ஹொக் உறுதியாகத் தெரிவித்துள்ளார். "நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய அம்சங்கள் இல்லை என்றாலோ, அவர்கள் அகதிகள் இல்லை என்றாலோ அவர்களை நாங்கள் இலங்கைக் குச் சென்றுவிடுமாறு கூறு வோம்" என்றார் அவர்.

நடேஸ் குடும்பத்தின் வீசா கோரிக்கை மறுபரிசீலனைக்கு உகந்தது என வழக்கறிஞர்கள் வாதிடுகிறார்கள். இளைய குழந் தையின் குடியேற்ற விண்ணப் பத்தைத் தனியாகப் பரிசீலனை செய்ய அரசு மறுப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். தாரு ணிகா அவுஸ்திரேலியாவில் பிறந் திருந்தாலும் அவரது பெற் றோர் படகுகள் மூலமாக நாட் டுக்குள் வந்தவர்கள் என்பதால், சட்டப்படி அவர் அகதி அந் தஸ்து கோரி விண்ணப்பிக்க முடியாது. தாருணிகாவின் விண்ணப்பத்தை அனுமதிப்பது குறித்து வேறொரு நாளில் பரி சீலிக்கப் போவதாக அமைச்சர் ஹொக் கூறியுள்ளார்.

# நந்திக்கடல், நாயாறு களப்பு புனரமைப்பு பணிகளை நடைமுறைப்படுத்துங்கள்

### அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 16

நந்திக்கடல், நாயாறு களப் புகளின் புனரமைப்பு பணி களை நடைமுறைப்படுத்து மாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் வோனந்தா, யாழ். காக் கைதீவு கடல் நீரேரியை தூர் வாருவதற்கான நடவடிக்கை ளையும் மேற்கொள்ளுமாறு நேற்று அதிகாரிகளுக்கு உத்தர விட்டார்.

நாடளாவிய ரீதியில் காணப் படுகின்ற களப்புகளை புனர மைக்கும் வேலைத் திட்டம் தொடர்பாக இடம்பெற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச் சரினால் மேற்குறித்த ஆலோச னைகள் முன்வைக்கப்பட்டுள் ளன. நாட்டின் பல்வேறு பகு திகளிலும் காணப்படுகின்ற சுமார் ஒன்பது பிரதான களப் புக்களை அபிவிருத்தி செய்வ தற்கான ஒழுங்கு நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவினால் நக்டா, நாரா மற் றும் கடற்றொழில் திணைக் களம் ஆகியவற்றிற்கு ஆலோ சனை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவற்றின் தற்போதைய நிலை தொடர் பாக ஆராயும் நோக்கில் நேற் றைய கூட்டம் நடைபெற்றி ருந்தது. இதன்போது, முல் லைத்தீவு, நந்திக்கடலை அபி விருத்தி செய்வதற்கான திட் டங்கள் ஏற்கனவே வகுக்கப் பட்டு விட்டதாக தெரிவித்த அதிகாரிகள், நந்திக்கடல் அபிவிருத்தி திட்டம் வன வளங்கள் பாதுகாப்பு அமைச் சின் அனுமதிக்காக அனுப்பப் பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

அதேபோன்று, நாயாறு களப்பு அபிவிருத்திக்கான விலைமனுக் கோரல் நடை முறைகள் வகுக்கப்பட்டுள்ள தாக அதிகாரிகள் தெரிவித்த நிலையில், விலைமனுக் கோரல் தொடர்பான விளம்பரங்களை அமைச்சின் இணையத் தளத் தில் தகுதியானவர்களை தெரிவு செய்து வேலைகளை ஆரம்பிக் குமாறு தெரிவித்தார்.

அதேபோன்று, ரெக்கவ களப்பு அபிவிருத்தி திட்டம் மதிப்பீட்டுக்காக பிரதேச சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதா கவும், அருகம்பே களப்பு தொடர்பான அபிவிருத்தி திட் டங்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதாக தெரிவித்தாகவும் கடற்றொழில் அமைச்சருக்கு தெரிவித்த அதிகாரிகள், அனு மதி கிடைத்தவுடன் அபிவி ருத்தி திட்டங்களை ஆரம்பிக்க முடியுமெனவும் சுட்டிக்காட் டினர்.

இந்நிலையில், அம்பாறை மாவட்டத்திற்குரிய பாணம மற்றும் பாணகல களப்புக ளின் அபிவிருத்திக்கான திட் டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் புத்தளம், சிலாபம், முந் தல் ஆகிய களப்புக்களும் அபி விருத்தி செய்யப்பட வேண்டு மெனவும் அமைச்சர் அதிகாரி களிடம் எடுத்துரைத்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கட லட்டை பண்ணைகளை அமைக் கும் திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருவதை சுட்டிக்காட் டிய அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, பூநகரி களப்புக்களில் இறால் வளர்ப்பு தொடங்குவ தற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நக்டா நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



அத்துடன், யாழ். காக்கைதீவு களப்பு தூர் வாரப்பட வேண்டு மென தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் அதற்கான நிதியை திரட்டுவதற்குரிய நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

மேலும், நடைங்கிலுமுள்ள பிரதான 09 களப்புக்களின் அபி விருத்திக்கான திட்டங்களையும் இவ்வருட இறுதிக்குள் வகுத்து அப்பணிகளை தொடங்குவதற் கான ஏற்பாடுகளை மேற்கொள் ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செய லாளர் திருமதி இந்து இரத் நாயக்க, நக்டா நிறுவனத்தின் தலைவர் நிமல் சந்திரரத்ன, நாரா நிறுவனத்தின் தலைவர் பேராசி ரியர் நவரத்னராஜா உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


இலை குழைகள் கும்பியாக பாதுகாக்கப்பட்ட நிலை - காரைநகர்


காரைநகர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் விற்பனைக்கு தயாராகவுள்ள கூட்டெரு


மாகந்துரையில் இரு நாள் தொடர்ச்சியான பயிற்சியின் போது.

# உரங்களின் இறக்குமதி தடையும், கூட்டுறவின் கூட்டெரு உற்பத்தியும்

செ.சுபாஸ்கரன்

சுற்றுலா துறையும், தொழில்நுட்ப துறையும், வல்லாதிக்க அரசியலும் அவசியமென பயணித்த உலகத்தை நிறுத்தி சிந்திக்க தூண்டியுள்ளது 2020ஆம் ஆண்டில் தோன்றிய நெருக்கடி. குறிப்பாக உணவு, போஷாக்கு, ஆரோக்கியம், விவசாயம், தற்சார்பு போன்ற விவாதங்கள் தோன்றியுள்ளன. கோவிட் 19 உருவாக்கியுள்ள பெரும் பொருளாதார சிக்கல் தெரிந்தோ தெரியாமலோ முழு உலகத்தின் பார்வையும் விவசாயத்தின் மேல் திரும்பியுள்ளது.

இதன் வெளிப்பாடாக தற்போது விவசாயத்துறை சார்ந்த விடயங்களில் இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளையும், திட்டங்களையும் காணமுடிகிறது. வாதங்களுக்கு அப்பால் அசேதன பசளைகளின் இறக்குமதிக்கான தடை அரசாங்கத்தின் ஒரு முக்கியமான முடிவாக உள்ளது. இதன் தாக்கம் எவ்வாறாக அமையப் போகிறது என்ற புரிதல் பொதுவெளியில் இல்லை.

இலங்கையின் விவசாயம் முற்றுமுழுதாக உரப்பாவனையிலே தங்கியுள்ளது. உரத்திற்கான மாற்றீடு இல்லாத பட்சத்தில் எதிர்பார்த்த விளைச்சலை பெறமுடியுமா? குறைந்த விளைச்சலுக்கு பொருத்தமான விலை கிடைக்குமா? போன்ற கேள்விகளால், விவசாயிகளை கால போக செய்கைகளை மேற்கொள்வது தொடர்பாக சிந்திக்க தூண்டியுள்ளது. இவை நேரடியாக விவசாய நுகர்வுப் பொருட்களின் விலையேற்றத்துக்கும், தட்டுப்பாட்டிற்கும் வழிகோலும். இவ்வாறான ஒரு நிலை நாட்டை போஷாக்கு பிரச்சனைக்கும், பட்டினி நிலைக்கும் கொண்டு செல்லகூடும். நாட்டின் நுகர்வு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தொடர்ச்சியான கால போக விசாயத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உரங்களின் இறக்குமதி தடையானது அனைத்து விவசாயிகளையும் சேதன பசளை பாவனையை நோக்கி நகர்த்தியுள்ளது.

### சேதன பசளை

விவசாய உள்ளீட்டு பொருட்களின் சந்தையில் உரங்களுக்கு மாற்றீடாக சேதன பசளைக்கு மிகப்பெரியளவில் கேள்வி உருவாகியுள்ளது. பாரம்பரிய விவசாயிகள் தம்மிடையே உள்ள தொடர்புகளினூடாக பண்ணை கழிவுகளையும், வீட்டுக்கழிவுகளையும் பயன்படுத்தி தமது விவசாயத்தை முன்கொண்டுபோவார்கள். ஏனைய விவசாயிகளின் பசளைக்கான தேவை பூர்த்தி செய்யப்படாது, இவ்வாறான ஒரு சூழலில், வடக்குக்கான தேவையை பூர்த்தி செய்யப்போவது யார்?

முற்று முழுதாக விவசாய கழிவுகளையும், பண்ணை கழிவுகளையும் மூலப் பொருட்களாக கொண்டுதான் சேதன பசளைகள் உருவாக்கப்படுகின்றன. இது கழிவுகளில் இருந்து வருமானம் பெறக்கூடிய ஓர் செயற்பாடு ஆகும். கிராமப்புரங்களில் தற்போதும் பல வீடுகளில், தங்கள் வீடுகளில் சேரும் கழிவுகளை சேர்த்து விற்கும் வழக்கம் உள்ளது. தற்போதைய காலகட்டத்தின் பசளை தேவை, குடும்பங்களுக்கான மேலதிக வருமானத்தை வீட்டு கழிவுகளிலிருந்து பெறும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

### கூட்டெரு பாவனை

சேதன பசளைகளின் பாவனைகளின் ஊடாக, விவசாய நிலங்களில் காற்றூட்டம் மற்றும் ஈரலிப்பு தன்மை அதிகரிக்கப்படும். இதனால் மண்ணில் உள்ள உயிரங்கிகளுக்கு போசனை ஊட்டப்பட்டு அவற்றின் செயற்பாடு அதிகரிக்கப்படும். இவற்றின் அதிகரித்த செயற்பாடுகள் மண்ணில் இருந்து தாவரங்களுக்கு தேவையான போசனைகளை வழங்குகிறது. இச் செயற்பாடு தாவரங்களின் வீரியமான வளர்ச்சிக்கு பக்கபலமாக அமையும்.

> **வடக்கில் கூட்டெரு உற்பத்திகள் இடம்பெற்றாலும், அவை சிறியளவிலான உற்பத்திகளாகவே காணப்படுகின்றன. இவை வீட்டுத்தோட்டங்களுக்கு பயன்படுத்தும் அளவிலே சந்தைக்கு கொண்டுவரப்படுகின்றன. கட்டமைக்கப்பட்ட நிர்வாக ஒழுங்குமுறையிலும் கூடிய கண்காணிப்புடனும் பொருத்தமான தொழில்நுட்ப வசதியுடனும், தற்சமயம் மூன்று உற்பத்தி தொழிற்சாலைகள் ஊடாக கூட்டுறவு அமைப்புகள் கூட்டெருவை உற்பத்தி செய்கின்றன.**

முதலில், கூட்டெருவிற்கும் இலை குழைகள், மாட்டு சாணம் மற்றும் பண்ணை கழிவுகளை நேரடியாக விவசாய நிலத்தில் பயன்படுத்துவதிலும் உள்ள வேறுபாட்டை அறியவேண்டியுள்ளது.

கூட்டெரு, சிறு துண்டுகளாக்கிய இலைகுழைகள், மாட்டு சாணம், பண்ணை கழிவுகளை ஒன்றின் மேல் ஒன்றாக, குறிப்பிட்ட நியமத்தில், கும்பி முறையில் குறிப்பிட்ட காலத்திற்கு பாதுகாத்து, சில உற்பத்தி செயன்முறையினூடாக பெறப்படுகின்றது. பாதுகாக்கப்படும் காலப் பகுதியில், சேர்க்கப்பட்ட பொருட்களில் உள்ள பக்ரீரியங்களின் செயற்பாட்டின் மூலம் சேர்க்கைகள் பிரிகை அடைகின்றன, இதனை கும்பிகள் உயர் வெப்பநிலையை அடையும்போது அறியலாம்.

கூட்டெருவை நேரடியாக விவசாயத்தில் பயன்படுத்தும்போது இலகுவாக மண்ணுடன் கலக்ககூடியதாக இருக்கும். மற்றும் கூட்டெரு பயன்படுத்தும் தினத்தில் இருந்தே பயிர்கள் ஊட்டச்சத்தினை பெற்றுக்கொள்ளும். ஆனால், இலைகுழைகள், மாட்டு சாணம், பண்ணை கழிவுகளை நேரடியாக பயன்படுத்தும்போது, குறிப்பிட்ட காலப்பகுதிகளின் பின்னரே நிலத்தை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில், உடனடியாக பயிரிடும் போது, பிரிகை அடையும் காலத்தில் வெளியிடப்படும் வெப்பத்தினால் பயிர்கள் அழிவடையக் கூடும், அல்லது கூடிய நீர் வளத்தினை இதற்காக பயன்படுத்த வேண்டும்.

தரமான கூட்டெருவை பெரியளவில் உற்பத்தி செய்து வழங்குவதற்கு கட்டமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் அவசியமாகவுள்ளன. வடமாகாணத்தில், இவ்வாறான தொழிற்சாலைகள் உள்ளனவா?

### கூட்டுறவின் உற்பத்தி

பல தசாப்தங்களாக, சமகால தேவைகளை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் பிற்காலத்தில் திறந்த பொருளாதார, யுத்த காரணங்களால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையாவிடினும், நாட்டில் உருவாகிய அசாதாரண சூழ்நிலைகள் கூட்டுறவின் தேவையை மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் அவ்வப்போது உணர்த்தியிருந்தன. தற்போதும், விவசாயம் கால்நடை சார்ந்த துறைகளில் மக்களும் விவசாயிகளும் நன்மை அடையக்கூடிய வகையில் பல்வேறு செயற்திட்டங்களை கூட்டுறவு அமைப்புகள் முன்னெடுக்கின்றன. குறிப்பிடத்தக்க ஒரு விடயம் 2018ஆம் ஆண்டின் ஆரம்பங்களிலேயே வடமாகாணத்தில் கூட்டுறவுகள் ஆய்வாளர்களுடன் இணைந்து கூட்டெரு உற்பத்தி முயற்சியை, அரசின் நிதிப்பங்களிப்புடன் கூட்டெரு தொழிற்சாலைகளாக உருவாக்கியுள்ளன.

வடக்கில் கூட்டெரு உற்பத்திகள் இடம்பெற்றாலும், அவை சிறியளவிலான உற்பத்திகளாகவே காணப்படுகின்றன. இவை வீட்டுத்தோட்டங்களுக்கு பயன்படுத்தும் அளவிலே சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. கட்டமைக்கப்பட்ட நிர்வாக ஒழுங்குமுறையிலும் கூடிய கண்காணிப்புடனும் பொருத்தமான தொழில்நுட்ப வசதியுடனும், தற்சமயம் மூன்று உற்பத்தி தொழிற்சாலைகள் ஊடாக கூட்டுறவு அமைப்புகள் கூட்டெருவை உற்பத்தி செய்கின்றன.

மாகந்துரை பிரதேச விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் பயிற்ச்சி பெற்ற ஆளணி வசதியுடன், ஒவ்வொன்றும் மாதாந்தம் 20 மெற்றிக்தொன் கூட்டெருவை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலைகளை காரைநகர் பல நோக்கு கூட்டுறவு சங்கம், வேலனை பல நோக்கு கூட்டுறவு சங்கம் மற்றும் கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம் மூன்றும் இயக்கிவருகின்றன.

பிரதேச விவசாயிகளும், விவசாய திணைக்களமும், வேலனை, காரைநகர் மற்றும் கரைச்சி தெற்கு சங்கங்களை அணுகுமிடத்து, பசளைக்கான கேள்வியில் தரமான கூட்டெரு மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதி தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

### எதிர்கால பார்வை

கட்டுரையின் ஆரம்பத்தில் எழுந்த இரு வினாக்களில், தரமான கூட்டெரு என்பது கூட்டுறவின் உற்பத்தியினூடாக உறுதிப்படுத்தப்படுகிறது, ஏனெனில் கூட்டுறவுகளால் உற்பத்தி செய்யும்போது மட்டுமே உற்பத்தி நம்பிக்கையுடையதாக இருக்கும். ஆனால், தற்போது வடக்குக்கான பசளை தேவையின் ஒரு சிறு பங்கை மட்டுமே சங்கங்களால் உற்பத்திசெய்ய கூடியதாக இருக்கின்றது. கூட்டுறவுகளுக்கு கூட்ரெு உற்பத்தி என்பது புதிய தொழில் முயற்ச்சியாக இருப்பினும், எதிர்கால நலன் கருதி மேலும் பல கூட்டுறவு அமைப்புகள் மாகாணரீதியாக கூட்டெரு உற்பத்தியில் இணைய வேண்டும்.

கூட்டெரு உற்பத்தியில் ஈடுபடும் கூட்டுறவு சங்கங்கள், தற்போதைய உட்கட்டுமானங்ளை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக, குறைந்தது 50 குடும்பங்களை உற்பத்திக்கான மூலப் பொருட்களை சேகரிப்பதற்காக உள்வாங்க வேண்டும். கூட்டுறவின் பயனாக ஒவ்வொரு குடும்பமும் மேலதிக வருமானத்தை பெறகூடியதாக இருக்கும். மேலும் சங்கங்களின் தொடர்ச்சியான மற்றும் அதிகரித்த உற்பத்தியை உறுதி செய்யும் முகமாக தொழிற்சாலைகளை பெரியளவில் தன்னியங்கி செயற்பாட்டுக்கு கொண்டுவந்து, இயந்திரங்களின் இரண்டாவது தொகுதியை உருவாக்க வேண்டும்.

இறுதியாக, விவசாயத்திற்கு உலகு விசேட கவனம் செலுத்தும் போது, விவசாயிகளுக்கான பயிற்செய்கை கடன்களை வழங்கவும் விவசாய உள்ளீட்டு பொருட்களை விநியோகிக்கவும், விளைச்சல்களை நியாய விலைக்கு கொள்வனவு செய்யவும், சந்தைப்படுத்தவும்; எமது ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆரோக்கியமான சமுக அமைப்பு தேவைப்படுகின்றது. இவ்வாறான முக்கிய நிலையில், சேவை அடிப்படையில் விவசாயிககளுடன் இணைந்து பயணிக்க கூட்டுறவு இயக்கம் தயாராகவுள்ளதா?

- கூட்டுறவுப் பயணம் - இந்த குறிப்புகள் கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு, அதன் சமகால சவால்கள் மற்றும் எதிர்கால சாத்தியப்பாடுகளை பதிவுசெய்யும்.


கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கூட்டெரு உற்பத்தி செயற்பாட்டின் போது...



# கொரோனா தொற்றுக்குள்ளானோர் நிச்சயம் சாப்பிடக்கூடாத உணவுகள்!

அபர்ணா ராமமூர்த்தி

உங்களுக்கோ அல்லது உங்களுக்கு தெரிந்த ஒருவருக்காவது கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டிருக்கும். முதல் அலையில் சிலர் எங்கோ யாருக்கோ கொரோனா என்று கேட்ட செய்திகள் எல்லாம், இந்த மூன்றாம் அலையில் மாறி, பலரும் கொரோனா நோய் தொற்றில் பாதிக்கப்பட்டார்கள்.

நீங்கள் கொரோனாவில் பாதிக்கப்பட்டோ, அல்லது கொரோனாவில் இருந்து மீண்டு வந்திருந்தால், நீங்கள் என்ன உணவு எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது முக்கியம். இது உங்களை அச்சப்படுத்த அல்ல, உங்கள் உணவு - உங்கள் உடலை மீட்டெடுக்கும் சக்தியை பெற்றிருக்கிறது. நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்களோ, அதை சார்ந்தே உங்கள் நோய் எதிர்ப்பு திறன் இருக்கும். நோய் எதிர்ப்பு சக்தி இந்த கொரோனா காலத்தில் எவ்வளவு முக்கியம் என்று உங்களுக்கே தெரிந்திருக்கும்.

சரி. கொரோனா கால உணவு குறித்த சில கேள்விகளுக்கு எளிமையான பதில்களை இந்தக் கட்டுரையில் பார்க்கலாம். இதற்காக ஊட்டச்சத்து நிபுணர் மீனாக்ஷி பஜாஜிடம் பி.பி.சி. தமிழுக்காக பேசினோம்.

**கேள்வி:** கொரோனாவால் ஒருவர் பாதிக்கப்பட்டால் அவர்கள் எந்த மாதிரியான உணவுகள் எடுத்துக் கொள்ள வேண்டும்? மஞ்சள், மிளகு எல்லாம் நல்லது என்று சொல்லப்படுகிறது? அது எதனால்?

**பதில்:** கொரோனா காலத்தில் அதிகம் பேசக்கூடிய விஷயம் நோய் எதிர்ப்பு திறன். கொரோனாவில் இருந்து தற்காத்து கொள்ளவும், எதிர்த்து போராடவும் இது அவசியம். இது தெரிந்த விஷயம்தான். எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், நீங்கள் நோய் எதிர்ப்பு திறனை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்கு Anti - Oxidants அதிகமாக இருக்கும் உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

Oxygen Radical Absorbance Capacity இதனை ORAC Value என்று அழைப்போம். ஒரு சில உணவுகளில் இந்த ORAC Value மிக அதிகமாக இருக்கிறது.

சீரகம், வாதுமை விதை, முருங்கை இலை, மஞ்சள், கராம்பு, மிளகு, கொக்கோ இந்த உணவுகளுக்கு எல்லாம் மிக மிக அதிக ORAC Value இருக்கிறது. இவற்றை சாதாரணமாகவே ஒருவர் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், கொரோனா காலத்தில் இதெல்லாம் பரிந்துரைக்கப்படுவதற்கான காரணம் இதுதான். உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இவை உதவும்.

ஆனால், அதற்காக இவற்றையெல்லாம் அதிகளவில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதற்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு இருக்கிறது.

உதாரணமாக மஞ்சளை எடுத்துக் கொள்கிறீர்கள் என்றால்...! சமையலில் சேர்க்கும் மஞ்சள்தூளை தவிர்த்து, காலையில் இரண்டு சிட்டிகை, இரவில் இரண்டு சிட்டிகை மஞ்சள் எடுத்துக் கொள்ளலாம். அதற்கு மேலதிகமாக எடுத்துக் கொண்டால் கல்லீரலில் வீக்கம் வரலாம்.

இதேபோல, எப்போதும் மஞ்சள் எடுக்கும்போது மிளகையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மஞ்சளில் இருப்பது குர்குமின். மிளகில் உள்ள பெப்ரின் சேர்க்கப்படும்போதுதான் அந்த குர்குமின் உடலில் வேலை செய்யும். உதாரணமாக நீங்கள் பாலில் மஞ்சள்தூள் சேர்த்து குடிக்கிறீர்கள் என்றால், அதில் கொஞ்சம் மிளகுத் தூளையும் சேர்க்க வேண்டும்.

இதேபோன்றுதான் கராம்பும். நாள் ஒன்றுக்கு 2-4 சிட்டிகை மூன்று மாதங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம். மூன்று மாதங்களுக்கு மேல் எடுக்கக்கூடாது.

அடுத்து முருங்கை இலை. இதில் விற்றமின்-சி, இரும்புச் சத்து, நார்சத்து, ஒமேகா 3 ஃபேட்டி ஒசிட்சுடன், இருப்பதிலேயே மிக அதிகமான ORAC Value கொண்டுள்ள உணவு. இவையெல்லாம் கொரோனா பாதிக்கப்பட்டிருக்கும் போதும், கொரோனாவில் இருந்து தற்காத்து கொள்ளவும் எடுக்க வேண்டிய உணவுகள்.

நோய் எதிர்ப்பு மண்டலத்திற்கு இந்த உணவுகள் மட்டும் எடுத்துக் கொண்டால் போதாது. அனைத்து சத்தான உணவுகளையும் சாப்பிட வேண்டும். அனைத்து விதமான விற்றமின்களும், கனியுப்புக்களும் அதற்கு தேவை.

**கேள்வி:** கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்கள் தண்ணீர் மற்றும் நிறைய நீராகாரங்கள் (Liquids and fluids) எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. எந்த மாதிரியான நீராகாரங்கள் எடுத்துக் கொள்ளலாம்?

**பதில்:** நெல்லிக்காய் சாறு மிகவும் நல்லது. சீனி, சர்க்கரை, தேன் போடாமல் வெறும் நெல்லிக்காய் சாறை குடித்தால் உடலுக்கு நல்லது. முருங்கை இலை சூப், தக்காளி சூப், காய்கறி சூப், ரசம், வெதுவெதுப்பான பால் ஆகியவற்றை குடிக்கலாம்.

ABC சாறு - அப்பிள், பீற்றூட், கரட் ஆகியவற்றை சேர்த்து, சீனி சேர்க்காமல் இந்த சாறைக் குடிக்கலாம். ஒருநாள் விட்டு ஒருநாள் குடிக்கலாம்.

இதனால், உடலிலுள்ள ஒட்சிசன் சேச்சுரேஷன் அளவு சரியாக இருக்கும். அதற்காக கொரோனாவால் தீவிரமாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பீற்றூட் சாறு கொடுத்தால் ஒட்சிசன் அளவு சீராகுமா என்று கேட்கக்கூடாது. மருத்துவமனை தேவைப்படாத, வீட்டுத் தனிமையில் இருப்பவர்கள் இதெல்லாம் சாப்பிட்டு, உடலை தேற்றிக் கொள்ளலாம்.

> **“சீரகம், வாதுமை விதை, முருங்கை இலை, மஞ்சள், கராம்பு, மிளகு, கொக்கோ இந்த உணவுகளுக்கு எல்லாம் மிக மிக அதிக ORAC Value இருக்கிறது. இவற்றை சாதாரணமாகவே ஒருவர் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், கொரோனா காலத்தில் இதெல்லாம் பரிந்துரைக்கப்படுவதற்கான காரணம் இதுதான். உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இவை உதவும்.”**

தேவையான அளவு தண்ணீர் கட்டாயம் குடிக்க வேண்டும்.

**கேள்வி:** கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எதையெல்லாம் சாப்பிடக்கூடாது?

**பதில்:** முதல் விஷயம், கட்டாயம் மது அருந்தக்கூடாது. அது உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை பலவீனமாக்கும். மேலும் இதனால் பதற்றம் அதிகரிக்கலாம்.

பழச்சாறுகள், இளநீர், குளிர்பான வகைகள், ஐஸ்கிறீம், பால் சேர்த்த இனிப்புகள் மற்றும் சாதாரண இனிப்புகளை தவிர்க்க வேண்டும்.

ஏனென்றால், இவற்றில் காபோஹைதரேற் அதிகம். இதை அதிகமாக எடுத்துக் கொண்டால், உங்கள் உடலில் காபநீர்ஒட்சைட் அதிகமாகும். இதனால், உங்கள் உடலில் ஒட்சிசனின் அளவு குறையலாம். குறிப்பாக நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு இது பொருந்தும்.

நீங்கள் தீவிர கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்றாலும், உங்கள் நிலை இன்னும் மோசமாகாமல் இருக்க, இதையெல்லாம் தவிர்ப்பது நல்லது.

> **கொரோனாவை தடுக்க மஞ்சள் நல்லது, மிளகு நல்லது. இதெல்லாம் சாப்பிட்டால் கொரோனா வராது, அல்லது நோய்த் தொற்று வந்து இதையெல்லாம் சாப்பிட்டால் நல்லது என்று பல கட்டுரைகளை படித்திருப்பீர்கள். ஆனால், அதற்கு பின் உள்ள அறிவியல் என்ன, இதெல்லாம் ஏன் நல்லது என்பதை தெரிந்து கொள்வதும் அவசியம்.**

மேலும், நூடில்ஸ், பாஸ்தா, பாண், பிஸ்கெற் போன்ற கோதுமை சார்ந்த உணவுகளை சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும்.

சத்துகள் நிறைந்த உணவு சாப்பிடுவது அவசியம். கார்ப்ஸ் எடுக்கலாம் ஆனால் Simple Carbohydrates-ஐ தவிர்க்க வேண்டும். உதாரணமாக எப்போதும் போல ஒரு குறிப்பிட்ட அளவு சாதம் சாப்பிடலாம். ஆனால், Junk food, இனிப்புகளை தவிர்க்க வேண்டும்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட சிலருக்கு வயிற்றுப் போக்கு, வாந்தி ஆகியவையும் ஏற்படுகிறது. அதுபோன்ற நேரத்தில் இளநீர் சாப்பிடலாம்.

**கேள்வி:** கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் இறைச்சி எடுத்துக் கொள்ளலாமா?

**பதில்:** வீட்டில் சமைத்த இறைச்சி சாப்பிடலாம். முக்கியமாக அவை சுத்தமாக இருக்க வேண்டும். முழுமையாக சமைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் சமைத்த உடனே சாப்பிட வேண்டும்.

முட்டை சிறந்தது. பொரிக்க வேண்டாம். வேக வைத்து சாப்பிடலாம். சுத்தமாக சமைக்கப்பட்ட மீன், கோழி இறைச்சியை சாப்பிடலாம். வாந்தி, வயிற்றுப் போக்கு இருந்தால், இறைச்சியை தவிர்ப்பது நல்லது.

**கேள்வி:** கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனச்சோர்வு, பதற்றம் ஆகியவை அதிகமாகிறது. இதை கட்டுப்படுத்த ஏதேனும் உணவுகள் இருக்கிறதா?

**பதில்:** இதற்கு தயிர் சாதம் சிறந்த உணவு. வெதுவெதுப்பான நீரில் தயிர் சேர்த்து சாப்பிடலாம். கச்சான் (நட்ஸ்) இருக்கக்கூடிய டார்க் சொக்லேட், தூங்கும் முன் வெதுவெதுப்பான பால் குடிக்கலாம்.

நீரிழிவு அல்லது இருதய நோய் இருப்பவர்கள் டார்க் சொக்லேட்டை தவிர்க்கலாம்.

**கேள்வி:** கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஏன் உணவில் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவை இரண்டுக்கும் என்ன தொடர்பு?

**பதில்:** கொரோனா காலத்தில் உங்கள் நோய் எதிர்ப்பு திறனை சிறப்பாக வைத்துக் கொள்வது அவசியம். அதற்கு நீங்கள் சிறந்த சத்தான உணவை எடுத்துக் கொள்வது அவசியமாகிறது.

எளிமையாக சொல்ல வேண்டுமானால், உங்கள் உடலில் ஏதேனும் சத்துகள் குறைந்தால், அது உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை பாதிக்கும். அனைத்து விதமான சத்துக்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உணவால் மட்டுமே உங்கள் நோய் எதிர்ப்பு திறன் சிறப்பாக இருக்கும் என்று சொல்ல முடியாது. சத்தான உணவு ஒரு முக்கிய காரணி. உங்கள் மரபணுக்கள் (Genes), நீங்கள் வாழும் இடம் (Environment), உணவு (Nutrition), ஆரோக்கியம் இதெல்லாம் சார்ந்தே ஒருவரின் நோய் எதிர்ப்பு மண்டலம் அமையும்.

உணவைப் பொறுத்த வரை அனைத்து விதமான சத்துகள் நிறைந்த உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். பழம், காய்கறிகள், இறைச்சி, தானியங்கள் என அனைத்து விதமான உணவுகளையும் சமமாக எடுத்துக் கொண்டால், உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலம் பாதிக்கப்படாமல் இருக்கும்.

**- நன்றி: பி.பி.சி. தமிழ்**

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 6
வினாத்தாள் I


நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

**அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

* **01** ஆம், **02**ஆம் வினாக்களுக்கு உருவிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து கோடிடுக.




1. 2. 3.




1. 2. 3.

* **03** ஆம், **04** ஆம் வினாக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.



1. 2. 3.



1. 2. 3.

* ஐந்து சொற்கள் கொண்ட கூட்டம் தரப்பட்டுள்ளது. இதில் இரண்டு ஒரு கூட்டமாகவும் மூன்று வேறோரு கூட்டமாகவும் பிரிக்க முடியும். இவற்றில் இரண்டு வரும் கூட்டத்தினைத் தெரிவு செய்க.

**05.** தாய், சேய், மாதா, அன்னை, பிள்ளை

*1. தாய், சேய*   *2. அன்னை, பிதா*   *3. சேய், பிள்ளை*

**06.** நகம், இதழ், செடி, வால், கொடி

*1. செடி, இதழ்*   *2. கொடி, வால்*   *3. செடி, கொடி*

* தரப்பட்டுள்ள சொற்களை நன்கு அவதானித்து அடுத்து வரும் சொல்லை இனங்காண்க.

**07.** உதயன், தாயகம், யாகம், ........................

*1. காகிதம்*   *2. கடிதம்*   *3. ஆதவன்*

**08.** சத்தியம், தங்கம், விகிதம், வலிமை

*1. திங்கள்*   *2. சத்தம்*   *3. சங்கிலி*

**09.** பிரதியிட்டுத் தீர்க்க

| |
|---|
| L = 0 |
| P = 1 |
| Q = 2 |
| R = 3 |
| S = 4 |
| T = 5 |
| V = 6 |


கழிக்குக
STVL
PPRT
____

*1.* RSQT   *2.* RSTQ   *3.* RQST

**10.** QPLT
x    R
____

*1.* VRPT   *2.* TPRV   *3.* VRTP

**11.** அருகில் தரப்பட்ட உருவிலுள்ள செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை?



*1. 2*   *2. 3*   *3. 4*


**12.** எண்கோலத்தினை அவதானித்து அடுத்து வரும் எண்களை இனங்கண்டு தெரிவு செய்க.

*1234, 2413, 4321, 3142,* ......................................

*1. 1234*   *2. 1324*   *3. 4123*


**13.** 910, 820, 730, 640, ....................................................

*1. 560*   *2. 550*   *3. 650*

**14.** 

அருகில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கையை இனங்கண்டு தெரிவு செய்க.


*1. 21*   *2. 10*   *3. 12*

**15.** 

இங்கு தரப்பட்டுள்ள உருவில் புள்ளிக் கோட்டின் வழியே வெட்டி சிறிய பகுதியை அகற்றிய பின்னர் பெரிய பகுதியில் உள்ள பக்கங்கள், வளைந்த விளிம்புகள் முறையே?

*1. (1, 2)*   *2. (3, 1)*   *3. (2, 2)*

**16.** இவ் உருவில் நிறந் தீட்டப்படாத பின்னத்தின் பகுதியெண்ணினைக் குறிக்கும் இலக்கம் எது?



*1. 5*   *2. 8*   *3. 3*

# பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்படலாம்

## புலமைப்பரிசில் பரீட்சையும் பிற்போடப்படலாம் என்று கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

2021 ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றை நடத்துவதில் தாமதம் ஏற்படக்கூடும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.




நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

தற்போதைய நிலைமை தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து கலந்துரையாடல்களை நடத்தி பரீட்சையை நடத்தும் தினம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக 2020 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் செயன்முறைப் பரீட்சைகளை நடத்தும் தீர்மானம் தொடர்பில் இன்று விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## ஒரே நாளில் மட்டும் 1,356 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் ஆயிரத்து 356 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்படி கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரை அந்தச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 33 ஆயிரத்து 949 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# ஜூன் 21இல் பயணத் தடை தளருமா? 20ஆம் திகதியே முடிவு எடுக்கும் அரசு

## அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய தகவல்



**கொழும்பு, ஜூன் 16**

**“நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயணத் தடை எதிர்வரும் 21 ஆம் திகதி தளர்த்தப்படுமா என்பது தொடர்பில் 19 அல்லது 20ஆம் திகதியளவிலேயே முடிவு எடுக்கப்படும்.”**

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பயணத் தடை நீக்கம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எதிர்வரும் 21ஆம் திகதி பயணத் தடை தளர்த்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பு. ஆனால், அது பற்றி தற்போதே முடிவெடுக்க முடியாது. அனைத்துக் காரணிகள் பற்றியும் ஆராய வேண்டும். அந்தவகையில் எதிர்வரும் 19 அல்லது 20ஆம் திகதியளவில் தீர்மானம் எடுக்கப்படும்” - என்றார். (இ)

# அழுத்தத்தால் ஊடக சந்திப்பு இரத்து செய்யப்படவில்லை

## கம்மன்பிலவுக்கு நிச்சயம் பதிலடி கொடுப்பேன் என சாகர சூளுரை

கொழும்பு, ஜூன் 16

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவின் கருத்துகளுக்கு எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அழுத்தம் காரணமாக ஊடக சந்திப்பு இரத்துச் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணியின்பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாடு திடீரென இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் குறித்த ஊடகவியலாளர் மாநாடு இரத்துச் செய்யப்பட்டது என 'மொட்டு' கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்திருந்தாலும், உயர்மட்டத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கமையவே அது பிற்போடப்பட்டது என உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து அதற்கு பொதுமக்கள் தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில், “கொரோனா நெருக்கடியால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் விதத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளமை ஏற்க முடியாது. எனவே, இந்நிலைமைக்கு பொறுப்பேற்று துறை சார் அமைச்சர் பதவி விலக வேண்டும்” என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கடந்த 12ஆம் திகதி மாலை விசேட அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மறுநாள் 13ஆம் திகதி விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

“எரிபொருட்களின் விலையை அதிகரிப்பதற்கான முடிவை வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவே எடுத்தது. அது அரசின் முடிவு. ஜனாதிபதி மற்றும் பிரதமரை பாதுகாக்கவே, நெருக்கடியான நிலையிலும் விலை அதிகரிப்பு தொடர்பான அறிவிப்பை நான் சுயமாக முன்வந்து விடுத்தேன்.



எனவே, இவ்விவகாரம் தொடர்பில் பகிரங்க விவாதமொன்றுக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்துக்குப் பகிரங்கமாக சவால் விடுக்கின்றேன்” என்று அமைச்சர் கம்மன்பில குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணியால் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் காமினி லொக்குகேயும், பொதுச்செயலாளர் சாகர காரியவசமும் இதில் பங்கேற்பார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. கம்மன்பிலவுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே குறித்த ஊடக சந்திப்பில் சாகர பங்கேற்கவிருந்தார். எனினும், இறுதி நேரத்தில் ஊடக சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது.

இது தொடர்பில் சாகர காரியவசத்திடம் வினவியபோது, “கம்மன்பிலவின் கருத்துகளுக்கு எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும். அழுத்தம்காரணமாக ஊடக சந்திப்பு இரத்துச் செய்யப்படவில்லை” - என்றார். (இ)

# 'மொட்டு' கூட்டணிக்குள் முறுகலாலேயே அவசரமாக நாடு திரும்புகின்றார் பஸில்



கொழும்பு, ஜூன் 16

அமெரிக்கா சென்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார் என நம்பகரமான வட் டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்த பஸில் ராஜபக்ஷ, ஜூலை நடுப்பகுதியிலேயே நாடு திரும்ப விருந்தார்.

எனினும், கட்சிக்குள்ளும், அரச கூட்டணிக்குள்ளும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ள நிலையிலேயே அவர் முன்கூட்டியே நாடு திரும்புகின்றார் எனத் தெரியவருகின்றது.

நாடு திரும்பிய கையோடு முக்கியமான சில சந்திப்புகளில் அவர் ஈடுபடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. (இ)

## சஜித் அணி பக்கம் தாவிய

# 16 உள்ளூராட்சி உறுப்பினர்கள் மீண்டும் ஐ.தே.கவுடன் சங்கமம்

கொழும்பு, ஜூன் 16

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் அணி பக்கம் தாவிய உள்ளூராட்சி சபை உறுப்பினர்களில் 16 பேர் மீண்டும் ஐ.தே.கவுடன் சங்கமித்துள்ளனர். கம்பளை நகர சபை உறுப்பினர்கள் 10 பேரும், கண்டி மாநகர சபை உறுப்பினர்கள் மூவரும், உதபளாத்த பிரதேச சபை உறுப்பினர்கள் மூவருமே இவ்வாறு இணைந்துள்ளனர் என்று ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார அறிவித்துள்ளார்.

கம்பளை நகர சபையானது ஐ.தே.கவின் ஆட்சி அதிகாரத்தில் கீழ் உள்ளது.

நகர சபையின் தலைவர் சமன்குமார லக்ஷ்மன் கிரியெல்லவின் நெருங்கிய சகாவென்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, எதிர்காத்தில் மேலும் சிலர் இணையவுள்ளனர் எனவும் ஐ.தே.க. பொதுச்செயலாளர் தகவல் வெளியிட்டுள்ளார். (இ)



# கலிபோர்னியாவில் மீண்டும் காட்டு தீ!

சன்பிரான்சிஸ்கோ, ஜூன் 16

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் மீண்டும் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட காட்டுத் தீ, ஒரு வாரத்துக்கு மேல் நீடித்தது. இதில் சுமார் 10 லட்சம் ஏக்கர்கள் அதாவது 4,096 சதுர கி.மீ., நிலப்பரப்பு எரிந்து சாம்பரானது. ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது கலிபோர்னியாவில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. கலிபோர்னியாவின் தென் பகுதியில் உள்ள வென்சுரா வட்டாரத்தில் தீயணைப்பு பணிகளில் ஹெலிகொப்டர் பயன்படுத்தப்படுகிறது.

தென்கிழக்கு கலிபோர்னியா, சான்டா பார்பரா வட்டாரக் கரையோரப் பகுதிகளிலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. அந்த பகுதிகளுக்கு சிவப்புக் கோடு எச்சரிக்கையான -அதி தீவிர காட்டுத்தீ எச்சரிக்கையை, அமெரிக்க தேசிய வானிலை சேவை மையம் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

'கலிபோர்னியாவின் பெரும்பாலான இடங்களில் இரு வாரங்களாக கூடுதலான வெப்பநிலை பதிவானது. இதனால் காட்டுத்தீ ஏற்பட்டது. இதைக் கட்டுப்படுத்த தவறினால், கடந்த ஆண்டைப் போன்று மிகப்பெரிய காட்டுத்தீயாக வரலாற்றில் இது பதிவாகக் கூடும்' என, வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)




# நோவாவக்ஸ் தடுப்பூசி 90 வீதம் பாதுகாப்பானது

மேரிலாண்ட், ஜூன் 16

அமெரிக்காவின் நோவாவக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள நோவோவக்ஸ் கோவிட் 19 தடுப்பூசி 90.4 வீதம் கொரோனா தொற்று நோயில் பாதுகாப்பளிக்கிறது என்று மூன்றாம் கட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

குறைந்த மற்றும் மிதமான பாதிப்புகளை 100 வீதம் இந்தத் தடுப்பூசி கட்டுப்படுத்தும் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்காவின் மேரிலாண்டில் இருந்து இயங்கும் நோவாவக்ஸ் நிறுவனம் அமெரிக்காவிலும் மெக்சிகோவிலும் 29,960 பேரிடம் தடுப்பூசியைப் பரிசோதனை செய்தது. இதன்போது, பைஸர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகளுக்கு இணையான பாதுகாப்பு, செயல்திறனை நோவாவக்ஸ் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் தடுப்பூசி பயன்பாட்டுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கவுள்ளதாக நோவாவக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அங்கீகாரம் கிடைத்தால் ஒவ்வொரு மாதமும் சுமார் 10 கோடி தடுப்பூசிகளை தயாரிக்க இருப்பதாகவும் ஆண்டு இறுதிக்குள் இது 15 கோடியாக அதிகரிக்கப்படும் என்று நம்புவதாகவும் நோவாவக்ஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# அணு ஆயுத பலம் அதிகரிப்பு: சீனா, பாகிஸ்தான், இந்தியாவின்!

## சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் தகவல்!

ஸ்ராக்ஹோம், ஜூன் 16

சர்வதேச அளவில், சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் அணு ஆயுதங்களை அதிகரித்து வருகின்றன என்று சுவீடனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஸ்ராக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் வெளியிட்ட புத்தகத்தில் கூறியுள்ளது.

இந்தப் புத்தகத்தின் தகவலின் படி, நடப்பு ஆண்டில் சீனாவிடம் 350, பாகிஸ்தானிடம் 165, இந்தியாவிடம் 156 அணு ஆயுதங்கள் உள்ளன. இதுவே கடந்த ஆண்டில், சீனா 320, பாகிஸ்தான் 160, இந்தியா 150, அணு ஆயுதங்களையே வைத்திருந்தன.

சர்வதேச அளவில் அணு ஆயுதங்கள் வைத்துள்ள 9 நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வடகொரியா நாடுகளிடம் மொத்தம் 13, 080 அணு ஆயுதங்கள் உள்ளன. இவற்றில் 90 சதவீதம் அணு ஆயுதங்கள் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் உள்ளன.

ரஷ்யாவிடம் 6,255, அமெரிக்காவிடம் 5,550, பிரான்ஸிடம் 290, பிரிட்டனிடம் 290 இஸ்ரேலிடம் 90, வடகொரியாவிடம் 40-50 அணு ஆயுதங்கள் உள்ளன. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவை தவிர்த்து மற்ற நாடுகளும் அணு ஆயுதங்களை தயாரிப்பதுடன், புதிய ஆயுதங்களை உருவாக்கவும் முயற்சித்து வருகின்றன.




சீனா தனது அணு ஆயுதங்களை நவீனப்படுத்தி விரிவுபடுத்தி வருகின்றது. இதேபோல், இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களிடம் உள்ள அணு ஆயுதங்களை அதிகரித்து வருகின்றன. சீனாவிடம் இருந்து அணு ஆயுதங்கள் தொடர்பாக பாகிஸ்தான் உதவி பெற்று வருகிறது. இந்தியா சொந்த முயற்சிகள் மூலம் அணு ஆயுதங்களை அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் நிர்வாக கிறிஸ்ரென்சன் கூறுகையில், பனிப்போர் முடிவுக்குப் பின்னர், "சர்வதேச அளவில், அணு ஆயுத கையிருப்புகள் குறைந்து வந்த நிலையில், தற்போது, சர்வதேச இராணுவ கையிருப்புகளில் அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது கவலைக்குரியது" - என்று கூறியுள்ளார். (ஐ)

# அல்பா வைரஸ் தாக்கத்தைவிட டெல்டாவின் பாதிப்பு இரட்டிப்பு!

## ஆய்வில் புதிய தகவல்

எடின்பேர்க், ஜூன் 16

பிரிட்டனில் பரவ ஆரம்பித்த அல்பா வகை கொரோனா வைரஸைவிட இந்தியாவில் பரவ ஆரம்பித்த டெல்டா வகை வைரஸ் மிகுந்த ஆபத்தானது. தொற்றுப் பரவலை இது இரட்டிப்பாக அதிகரித்து வருகின்றது என்று ஸ்கொட்லாந்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

பிரிட்டனில் அதிவேகமாக டெல்டா வகை வைரஸ் பரவி வருகின்றது. இதனால், அங்கு ஏற்படுத்தப்படவிருந்த தளர்வுகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில், ஸ்கொட்லாந்தின் ஸ்ரார்ச்லைற் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்தவை வருமாறு,

"ஸ்கொட்லாந்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 134 பேர் டெல்டா வகையால் பாதிக்கப்பட்டவர்கள். அல்பா வைரஸைவிட டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக உள்ளது.

ஆனால், தடுப்பூசி போட்டவர்களை இந்தத் தொற்று 70 வீதம் வரை தடுக்கின்றன. டெல்டா வகையை பைஸர் 79 வீதமும், கோவிஷீல்ட் 60 வீதமும் தடுக்கின்றன. (ஐ)

# டெல்டா வைரஸில் மேலுமொரு திரிபு

புதுடில்லி, ஜூன் 16

இந்தியாவில் கொரோனா 2ஆம் அலையின் அதிதீவிர பாதிப்புக்கு காரணமான டெல்டா வகை வைரஸ் மீண்டும் உருமாறியுள்ளதாக விஞ்ஞானிகளின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா தொற்று நாள் ஒன்றுக்கு 3 இலட்சத்தை எட்டியது. இதற்கு டெல்டா வைரஸ் காரணமாக இருந்தது. இந்த நிலையில், புதிதாக உருமாறியுள்ள டெல்டா வகை வைரஸை 'டெல்டா பிளஸ்' என்று அழைக்கப்படுகின்றது.

டெல்டா பிளஸ் வைரஸ் கூர்முனை புரதத்தில் ஏற்பட்டுள்ளதாகவும், அது மனித கலங்களில் நுழைந்து பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் டில்லியில் உள்ள மரபியல் மற்றும் ஒருங்கிணை உயிரியல் நிறுவன விஞ்ஞானி வினோத் ஸ்காரியா கூறுகிறார்.

எனினும், இந்த புதிய வகை வைரஸ் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆனால், அதனை தொடர்ந்து கண்காணித்து வருவது அவசியம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# எமக்கு சாவல் விடுத்தால் அதனை ஏற்க நாம் தயார்!

## நேட்டோவுக்கு சீனா பதில்



உலக அமைதிக்கு சீனாவால் அச்சுறுத்தல் என்று அவதூறு கூறுவதை நேட்டோ கைவிடவேண்டும் என்று கூறியுள்ளது சீனா.

இது தொடர்பில் சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தில், "நாங்கள் யாருக்கும் சவால் விடுக்கவில்லை. ஆனால், யாராவது எங்களுக்கு சவால் விடுத்தால் நாங்கள் அலட்சியமாக இருக்க மாட்டோம்", என்று கூறியுள்ளது.

பிரஸல்ஸ் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நேட்டோ கூட்டணியின் மாநாட்டில் சீனா உலகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று எச்சரிக்கப்பட்டது.

அத்துடன், சீனா தனுது அணு ஆயுதங்களை விரிவுபடுத்துகிறது என்றும், அதன் இராணுவ நவீனமயமாக்கல் இரகசியமானது என்றும் அந்த அமைப்புக் குற்றஞ்சாட்டியது.

இந்த நிலையில், சீன அரசாங்கம் தனது உத்தியோகபூர்வ இணையத்தில்,

"நேட்டோ அறிக்கை சீனாவின் அமைதியான வளர்ச்சியை அவதூறு செய்யும் வகையில் அமைந்துள்ளது. அத்துடன், தவறான மதிப்பீடுகளை முன்வைத்துள்ளது. நேட்டோ கூட்டணியின் பனிப்போர் மனநிலையை குறிக்கும் வகையில் அந்த அறிக்கை அமைந்துள்ளது. சீனா எப்போதும் அமைதியாக முன்னேறிச் செல்வதில் உறுதியுடன் உள்ளது.

"நாங்கள் யாருக்கும் சவால் விடுக்க வில்லை. ஆனால், யாராவது எங்களுக்கு சவால் விடுத்தால் நாங்கள் அலட்சியமாக இருக்க மாட்டோம்" என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## ஐ. சி. சியின் சிறந்தவீரராக முஸ்பிஹூர் ரகீம் தெரிவு!

டுபாய், ஜூன் 16

மே மாதத்துக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக பங்களா தேஷின் முஸ்பிஹூர் ரகீம் தெரிவாகியுள்ளார்.

ஐ.சி.சி. ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரருக்கான விருதை அண்மைக்காலமாக வழங்கி வருகின்றது.

முன்னாள்வீரர்கள், ஒளிபரப்பு நிறுவனங்கள், பத்திரிகை யாளர்கள் ஆகியோரும், ஐ.சி.சி.அக்கடமியின் ரசிகர்களும் வாக்களிப்பு முறை மூலம் வீரர்களை தெரிவு செய்கின்றனர்.

இந்த நிலையில், மே மாதத்துக்கான சிறந்த வீரர்கள் பட்டியலில் இலங்கையின் பிரவீன் ஜெயவிக்ரம, பாகிஸ் தானின் ஹசன் அலி, பங்களாதேஷின் முஸ்பிஹூர் ரகீம் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டனர். இதில், முஸ்பிஹூர் ரஹீம் தெரிவானார். (ஐ)

## டெஸ்ட் சம்பியனுக்கு 32 கோடி ரூபாய் பரிசு

டுபாய், ஜூன் 16

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிரிக்கெட்டின் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 16 இலட்சம் டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 32 கோடி ரூபாய் பரிசாக வழங்கப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியா - நியூஸிலாந்து இறுதிப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி இங்கிலாந்தின் சௌதாம்டனில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டிக்கான பரிசுத் தொகைகளை அறிவித் துள்ளது. இதன்படி, சம்பியன் வெல்லும் அணிக்கு கிண்ணத்துடன் 16 இலட்சம் டொலர்கள் பரிசாக அளிக்கப்படும்.

இரண்டாவது இடம்பிடிக்கும் அணிக்கு 8 இலட்சம் டொலர்கள் (சுமாராக 16 கோடி இலங்கை ரூபாய்), 3ஆம் இடம் பிடித்த அவுஸ்திரேலிய அணிக்கு 4.5 இலட்சம் டொலர்கள் (9 கோடி இலங்கை ரூபாய்), 4ஆம் இடம்பிடித்த இங்கிலாந்து அணிக்கு 3.5 இலட்சம் டொலர்கள் (7 கோடி இலங்கை ரூபாய்) ஐந்தாம் இடத்திலுள்ள பாகிஸ்தான் அணிக்கு 4 கோடி ரூபாயும் கிடைக்கும். (ஐ)

### கோபா அமெரிக்க தொடர்

## நெய்மரின் ஆட்டத்தால் வென்றது பிரேஸில் அணி!



பிரேஸிலியா, ஜூன் 16

நெய்மரின் அற்புதமான ஆட்டத்தால் வெனிசுலா அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது பிரேஸில் அணி.

கோபா அமெரிக்க உதைபந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமா னது. முதல் போட்டியில் 'பி' பிரிவில் இடம்பிடித்துள்ள பிரேஸில் - வெனி சுலா அணிகள் மோதின.

போட்டி ஆரம்பமான 23ஆவது நிமி டத்தில் பிரேஸில் வீரர் மார்கியூனஸ் கோல் அடித்தார். இதனால், முதல் பாதி ஆட் டத்தில் பிரேஸில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில், 62ஆவது நிமிடத்தில் பிரே ஸில் அணிக்கு 'பெனால்டி' கிடைத்தது. வாய்ப்பை வீணாக்காமல் கோல் அடித்தார் நெய்மர்.

போட்டி முடிவடைய ஒரு நிமிடம் முன்னதாக நெய்மர் கொடுத்த பந்தை பெற்ற கபி, கோலாக மாற்றி னார்.

இறுதியில் பிரேஸில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதே பிரிவில் நடந்த மற் றொரு போட்டியில் கொலம்பிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோரை வீழ்த்தியது. (ஐ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான நியூஸிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், ஜூன் 16

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி எதிர் வரும் 18ஆம் திகதி இங்கிலாந்தின் சௌதாம்ப்டன் நகரில் தொடங்குகிறது.

இந்தப் போட்டிக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண் டாவது டெஸ்ட் போட்டியில் விளையா டாத கேன் வில்லியம்ஸன் இந்தப் போட் டியில் விளையாடவுள்ளார்.

ஆனால், இந்தப் போட்டியில் சாண்ட்னர் நீக்கப்பட்டுள் ளார். காயம் காரணமாகவே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்:

கேன் வில்லியம்ஸன் (தலைவர்), ரொம் லதம், கொன்வே, றோஸ் ரெய் லர், ஹென்றி நிகோல்ஸ், வில் யங், பிஜே வட்லிங், ரொம் பிளெண்டல், கிராண்ட் ஹோம், கைல் ஜமைசன், ரிம் சௌதி, வோக்னர், அஜாஸ்படேல், டிரெண்ட் போல்ட், மேட் ஹென்றி.

### யூரோ கிண்ண உதைபந்தாட்டம்

## உக்ரைனுடனான போட்டியில் நெதர்லாந்து 'த்ரில்' வெற்றி!

டென்ஜெலின் இறுதிநேர கோல் கைகொடுக்க 3-2 என்ற கோல் கணக்கில் த்ரில் வெற்றி பெற்றது நெதர்லாந்து அணி.

யூரோ கிண்ணம் என்றழைக்கப்படும் ஐரோப்பிய அணிகளின் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இரவு ஆம்ஸ்ரடாமில் நடந்த சி பிரி வுக்கான போட்டியில் நெதர்லாந்து - உக்ரைன் அணிகள் மோதின.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

52ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் ஒய்னால்டம் முதல் கோல் அடித்தார். 58ஆவது நிமிடம் மீண்டும் அசத்திய நெதர் லாந்து அணிக்கு வெக்ஹார்ட்ஸ்ட் ஒரு கோல் அடிக்க, 2-0 என முந்தியது.

ஆனால், 75 வது நிமிடத்தில் உக்ரை னின் ரோமன் கடத் திக் கொடுத்த பந் தைப் பெற்ற அன்ட்ரீ ஒரு கோல் அடித்தார்.

79ஆவது நிமிடம் ரஸ்லன் அடித்த பந்தை அப்படியே தலையால் முட்டி கோலாக மாற்றினார் ரோமன்.

இதனால், 2 - 2 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலை பெற்றது. இதனால், போட்டி உச்சக்கட்ட விறுவிறுப்பு நோக்கிச் சென்றது.

85 வது நிமிடம் நதன் அகே அடித்த பந்தை வாங்கிய நெதர்லாந்து வீரர் டென்ஜெல், தலையால் முட்டி கோல் அடித்து மிரட்டினார். முடிவில் நெதர்லாந்து அணி 3-2 என்ற கோல் கணக்கில் 'த்ரில்' வெற்றி பெற்றது. (ஐ)





## ஆர்ஜென்ரீனாவுக்காக கிண்ணம் எனது கனவு!

### அணித் தலைவர் மெஸ்ஸி

புவனஸ்அயர்ஸ், ஜூன் 16

"ஆர்ஜென்ரீனா அணிக்காக கோபா அமெரிக்கக் கிண்ணத்தை வெல்வது எனது மிகப்பெரிய கனவு," என்று மெஸ்ஸி கூறியுள்ளார்.

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி. இவர் கடந்த 15 ஆண்டுகளாக அந்த அணிக்காக விளையாடி வருகின்றார்.

பார்ஸிலோனா அணிகாக அவர் பல வெற்றிக் கிண் ணங்களை வென்று கொடுத்த போதிலும், தனது தாய் நாட்டு அணிக்காக அவர் எந்தக் கிண்ணத்தையும் வெல்ல வில்லை. இறுதியாக 1993 ஆம் ஆண்டின் பின்னர் ஆர் ஜென்ரீனா எந்தக் கிண்ணத்தையும் பெரிதாக வெல்ல வில்லை.

இந்த நிலையில் மெஸ்ஸி கூறுகையில், "ஆர்ஜென்ரீனா அணிக்காக எப்போதும் விளையாடத் தயாராக உள் ளேன். ஆர்ஜென்ரீனா 'ஜேர்சியுடன்' கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதுதான் எனது மிகப்பெரிய கனவு. ஒவ் வொரு முறையும் நெருங்கி வந்து கடைசியில் கிண்ணம் கைநழுவி விடுகிறது. இருப்பினும் தொடர்ந்து முயற் சித்துக் கொண்டிருக்கிறேன். எனது கனவு நிறைவேற எப்போதும் போராடுவேன்," என்றார். (ஐ)

# எரிபொருள் விலையை குறைப்பது தொடர்பில் அரசின் உயர்பீடம் பேச்சு

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

எரிபொருள் விலையைக் குறைப்பது தொடர்பில் அரசின் உயர்பீடத்தில் பேச்சு இடம்பெற்று வருகின்றது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறி



னார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "எரிபொருள் விலை தொடர்பில் ஜனாதிபதியும், பிரதமரும் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எடுப்பார்கள். விலை அதிகரிக்கப்படாவிட்டால் சிறந்தது என்றுதான் நாம் எதிர்பார்க்கின்றோம். எனினும், நாட்டின் நிலைமையைக் கருத்தில்கொண்டு அதிகாரிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். விரைவில் சிறந்த தீர்மானம் ஒன்று எடுக்கப்படும்" - என்றார். (இ)



# ரூ. 5ஆயிரம் கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை!

## அரச அதிபரிடம் சர்வமத தலைவர்கள் விடுத்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை அதிகரித்தல், தடுப்பூசி வழங்கலை விரைவுபடுத்துமாறு சர்வமதத் தலைவர்கள் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளனர்.

நேற்று மாவட்ட செயலகத்தில் அவரை சந்தித்தபோதே இந்தக் கோரிக்கையை அவர்கள் விடுத்தனர்.

மேலும், தற்போதைய பயணக்கட்டுப்பாடுகளில் மக்களின் அத்தியாவசிய தேவைகள் தடைப்படாமல் செல்லுதல், தனிமைப்படுத்தல் மையங்களில் ஏற்படும் அசௌகரியங்களுக்கு தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கைகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

இதன்போது, சர்வமத தலைவர்களின் இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் உறுதியளித்தார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-3)

# பிள்ளையுடன் குளத்தில் நீராடிய தந்தை மாயம்!

கிளிநொச்சி, ஜூன் 16

பிள்ளையுடன் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று பிற்பகல் கிளிநொச்சி மலையாளபுரம் புதுஐயங்கன் குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காணாமல் போனவர் 3 பிள்ளைகளின் தந்தையான பொன்னகர் வடக்கைச் சேர்ந்த முத்துலிங்கம் அருமைநாதன் (வயது 40) என்று தெரியவந்துள்ளது.

இவர் காணாமல் போனதையடுத்து அயலவர்கள் அவரை தேடினர். ஆனால், நேற்றிரவு வரை அவர் மீட்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. (ஐ)

# வடிசாராயம் காய்ச்சியவர் குப்பிளானில் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 16

குப்பிளான் பகுதியில் வடிசாராயம் காய்ச்சிய ஒருவரை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் சுற்றிவளைப்பு நடத்தினர். இதன்போது , சந்தேக நபரிடமிருந்து 270 லீற்றர் வடிசாராயம் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-3)





# நாவற்குழியில் கொரோனா நோயாளர் பராமரிப்பு நிலையம் திறந்து வைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 16

தென்மராட்சி - நாவற்குழியில் கொரோனா இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திற்கு செயலகத்திற்கு சொந்தமான நெல் களஞ்சியத்தில் 200 கட்டில்களுடன் இந்தப் பராமரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (ஐ- 03)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 12 - 1941



மறைவு 13 - 06 - 2021

## திருமதி வேலாயுதபிள்ளை அழகேஸ்வரி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, கொழும்பு, கனடா Scarborough ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை அழகேஸ்வரி 13.06.2021 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து தம்பதியரின் அருமை மகளும், சின்னத்தம்பி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், சாந்தகுமாரி(சாந்தி), காலஞ்சென்ற சுதேசன், சுகந்தன், பாஸ்கரன்(சுபாஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சுப்ரமணியம்(மணியம்), நவரத்தினம்(சொக்கன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பாலசுப்ரமணியம்(காந்தி), லீலா, கலாரஞ்சினி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியும், சிந்துஜா(சிந்து), கங்காகர்(கங்கா), செந்தூரன், பிருந்தா, சந்தியா, ஷாம், சாருக்கன், ஷாத்விகா, ஜனார்த்தன், அஜந்தினி, நந்தகுமார்(நந்தன்), பிரசாத் சுதர்சன், நிருதரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், விதுஷா, பால்ராஜ், யாதவன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

**நிகழ்வுகள்**

**பார்வைக்கு**

Get Direction
Wednesday, 16 Jun 2021 4:00 PM - 7:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**

Get Direction
Thursday, 17 Jun 2021 12:30 PM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**

Get Direction
Thursday, 17 Jun 2021 2:30 PM - 3:30 PM
Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சுகந்தன் - மகன்** - +16478316040

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# யாழ். மாவட்டத்தில் தொற்றாளர்கள் அதிகரிப்பதற்கு மக்களே காரணம்!

## யாழ். படைகளின் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். மாவட்டத்தில் தொற்றாளர்கள் அதிகரித்தமைக்கு பொதுமக்களே காரணம் என்று யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

நாவற்குழியில் கொரோனா இடைத்தங்கல் பராமரிப்பு நிலையத்தை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த காலத்தை விட தற்போது தொற்றுஅதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. சில ஆலயங்களில் சுகாதார பிரிவினரின் கட்டுப்பாடுகளை மீறி ஆலய உற்சவங்களை நடத்தியமையே இதற்குக் காரணம்.

தற்போதும் சில இடங்களில் திருமண நிகழ்வுகள் சுகாதார பிரிவின் அனுமதி இல்லாமல் நடத்தப்படுகின்றது. மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த பயணத்தடை என்பது மக்களை தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவே. எனவே, பொதுமக்கள் இந்த பயணத்தடைக் காலத்திலாவது சுகாதாரப் பிரிவினரின் கட்டளைகளை ஏற்று வீடுகளில் இருப்பது மிகவும் சிறந்ததாகும்.

பொதுமக்களுக்கு சிகிச்சை வழங்கவென சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்திருக்கின்றோம். அதாவது, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மாகாண பணிப்பாளர் மற்றும் ஏனைய சுகாதாரப் பிரிவினர் மற்றும் இணுவத்தினரின் முயற்சியின் பயனாக இன்று (நேற்று) இந்த பராமரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் சுகாதார பிரிவினருடன் இணைந்து தொற்றை இல்லாதொழிக்க உதவ முன்வரவேண்டும் - என்றார். (ஐ- 3)

## ஜனாதிபதி...

புதிய அரசமைப்பை உருவாக்குவது குறித்தே இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படவிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று காலை அறிவித்திருந்தார். இன்று மாலை 4.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பேச்சு நடைபெற ஏற்பாடாகியிருந்தன.

கூட்டமைப்புடனான பேச்சு குறித்த விவரம் வெளிவந்ததால் தெற்கில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அழுத்தத்தையடுத்தே அதனை ஒத்திவைக்கும் முடிவை அவர் எடுத்திருக்கிறார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றிடமிருந்து அண்மைக்காலத்தில் உருவாகியிருந்த அழுத்தங்களையடுத்தே கூட்டமைப்புடன் பேசுவதற்கு அரசாங்கம் முன்வந்தது என்றும் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. இருந்தபோதிலும் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறான பேச்சு ஒன்றை தென்பகுதியிலுள்ள கடும் போக்காளர்கள் விரும்பவில்லை எனத் தெரிகின்றது.

இரா.சம்பந்தன் தலையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனவும், கூட்டமைப்பின் தலைவருடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா (தமிழ் அரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி செயலகம் ஒரு வாரத்துக்கு முன்னரே அனுப்பியிருந்தபோதிலும், இது தொடர்பான செய்தி இரு தரப்பினராலும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. நேற்று காலை சந்திப்பு குறித்த தகவல் ஊடகங்களில் வெளியானதையடுத்தே தென்பகுதியிலிருந்து அழுத்தங்கள் அதிகரித்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இடையே நாளை (இன்று) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் தொடர்பான புதிய திகதியும் நேரமும் பின்பு அறிவிக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (2)

## மனித உரிமைகள்...

முக்கிய அம்சங்கள் வருமாறு:

"சீனாவின் எழுச்சியை அடிப்படையாகக் கொண்டே இந்த நூற்றாண்டில் ஆசியாவின் எழுச்சி இடம்பெறும் என்பது எம் அனைவரதும் நம்பிக்கையாகும். அந்த வரலாற்று வெற்றியை சீனாவிற்கு பெற்றுக் கொடுத்தது இத்தால் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1921ஆம் ஆண்டு பன்னிரெண்டு பேர் ஒன்றிணைந்து உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாகும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அதனாலேயே சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆசியாவிற்கே மிகப்பெரியதும், முக்கியமானதுமான கட்சி என்று நான் கூறினேன். சீனா என்பது நாடு மட்டுமல்ல. சீனா என்பது மாபெரும் நாகரிகம். சீனா பல்வேறு நாடுகளால் படையெடுப்பிற்கு உட்படுத்தப்பட்ட தவிர சீனா ஒருபோதும் பிற நாடுகள் மீது படையெடுக்கவில்லை. அத்துடன் உலகின் பெரும் தொகையான மக்கள் ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தை நம்பியுள்ள நாடு இதுவாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வில் இலங்கையின் சுதந்திரத்திற்காக சீனா செய்த சேவையை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

கடந்த காலத்தில், பௌத்தமே சீனா மற்றும் இலங்கையை இணைத்தது. சுதந்திரத்திற்குப் பின்னர், எங்களிடையே உறவை முதலில் கட்டியெழுப்பியது கம்யூனிஸ்ட் கட்சிதான். சீன கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இலங்கை நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட பல விடயங்களை மதிக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவுனர் மறைந்த எஸ்.ஏ.விக்ரமசிங்க விவசாயத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவர் முன்வைத்த நில்வலா கங்கை திட்டம், இடதுசாரி தலைவர் ஒருவர் விவசாயம் குறித்து முன்வைத்த மிக முக்கியமான திட்டமாகும். இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி காரணமாக, சீனாவுடனான நமது கடந்தகால உறவை மேலும் வலுப்படுத்த முடிந்தது.

கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து பணியாற்றிய அரசாங்கத்தின் கீழ் பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை நாங்கள் முடிவுக்கு கொண்டுவந்தோம். யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் நமது சுதந்திரத்திற்காக சீன அரசாங்கம் செய்த தியாகங்களை நாங்கள் எப்போதும் பாராட்டுகிறோம். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் ஆசிய நாடொன்றின் சுதந்திரத்திற்கு இது மாபெரும் பங்களிப்பாகும்" என பிரதமர் தெரிவித்தார்.

## மக்களின்...

துவ சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

சமூகத்தில், மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், அமுலில் உள்ள கட்டுப்பாடுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்ற குழப்பம் எழுந்துள்ளது எனவும் அவர் ஊடகங்களிடம் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டால், மீண்டும் கொரோனாத் தொற்று சடுதியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே, பயணக் கட்டுப்பாட்டைக் கடுமையாக்கி, தேவையற்ற நடமாட்டங்களைக் குறைப்பதோடு கண்காணிக்கவும் வேண்டும்.

இலங்கையில் தினசரி தொற்று எண்ணிக்கை 2 ஆயிரத்தை விடவும் அதிகமாகப் பதிவாகி வரும் நிலையில் நாடு ஆபத்தான கட்டத்தில் இல்லை என்று நாங்கள் கூற முடியாது.

நாட்டில் தொற்று நோய்க்கு முற்றுப் புள்ளி வைக்க நாம் அனைவரும் முடிந்த பங்களிப்பைச் செய்ய வேண்டும்" - என்றார். (இ)

## 2 வயது...

சேர்ந்தவர்களாவர்.

யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகின.

இதில், யாழ்.போதனா வைத்தியசாலையில் 486 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 25 பேருக்கு தொற்று இனங்காணப்பட்டது.

இதில், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேர் (06, 12 வயதுடைய சிறுவர்கள், 09 வயதுடைய சிறுமியும் உள்ளடக்கம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேர், யாழ்.சிறைச்சாலையில் இரண்டு பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 03 பேர், நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் ஒருவர் அடங்குவர்.

இதேவேளை முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 வயது ஆண் குழந்தை ஒன்றும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 144 பேருக்கு நடத்தப்பட்ட சோதனையில் 17 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

இதில், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேர், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர் (2 வயது குழந்தைகள் இருவர்) உள்ளடங்குவர். (ஐ)

# விலை அதிகரிப்பை நிறுத்த மாற்றீட்டை முன்வைக்கவும்

## வலு சக்தி அமைச்சர் கம்மன்பில வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் எரிபொருள் விலை அதிகரிப்பை நிறுத்த வேண்டுமாயின், மாற்றீடுகளை முன்வைக்க வேண்டும் என்று வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருள் விலை அதிகரிப்பதற்கான தீர்மானம் புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசு எரிபொருள் விலைகளைத் தடுமாற்றத்தில் அதிகரிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



விலை அதிகரிப்பை நிறுத்த வேண்டுமாயின், இதனை விமர்சிப்பதற்குப் பதிலாக மாற்றீடுகளை முன்வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# யாழ். போதனாவில் நேற்று கொரோனாவால் ஐவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கோவிட்-19 நோயாளிகள் ஐவர் நேற்று இரவு 9 மணி வரையான 24 மணிநேரத்தில் உயிரிழந்தனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நால்வரும் திருகோணமலை புல்மோட்டையை சேர்ந்த ஒருவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அரியாலையை சேர்ந்த 89 வயது ஆண், புத்தூரை சேர்ந்த 48 வயது ஆண், பலாலியை சேர்ந்த 59 வயது ஆண், கோப்பாயை சேர்ந்த 51 வயது பெண் ஒருவருமாக நால்வர் உயிரிழந்தனர்.

திருகோணமலை புல்மோட்டையை



சேர்ந்த 58 வயது பெண் ஒருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 62ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## 55 பேர் மரணம்...

பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியதாகவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இலங்கையில் கொரோனாவினால் பலியானவர்களின் தொகை 2,315 ஆக அதிகரித்துள்ளது.

மரணமானவர்களில் 22 பேர் பெண்கள். 33 பேர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 30 வயது முதல் 59 வரையிலான வயதானவர்கள் 11 பேர் எனவும் 44 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## கோதுமை மாவின்...

தாகத் தெரிவித்துள்ளது.

நேற்று தொடக்கம் இந்த விலை அதிகரிப்பு அமுலில் உள்ளது எனவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் 50 கிலோ பிறீமா மில்க் பிரேண்ட் மாப் பொதியின் விலை 4 ஆயிரத்து 175 ரூபாயாகவும், ரொட்டி செய்வதற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் கோதுமை மாவின் விலை 4 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மில்க் பிராண்ட் என்ற மாப் பொதி அதிகமாக வெதுப்பகங்களால் கொள்வனவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, பாண் தவிர்ந்த ஏனைய அனைத்து வகையான வெதுப்பக பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனப் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பேக்கரி உரிமையாளர்கள் விலையை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்த்தன தெரிவித்தார்

அதனடிப்படையில் அனைத்து பேக்கரி வகை பொருட்களும் 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ)

## நிலைமையை...

களின் நாளாந்த எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. எனவே, நாட்டில் தற்போது உள்ள கொரோனாத் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்த இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் செல்லும்."

- இவ்வாறு சுகாதார சேவைகள் தொற்று நோய் மற்றும் கொரோனா நோய் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

ராகம போதனா வைத்தியசாலையில் வைத்து ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் இப்போது பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்களின் கருத்துப்படி இது தேவையானது மற்றும் மிகவும் நல்லது. ஆனால், நாட்டு மக்களுக்கு இதனால் பல சிரமங்கள் உள்ளன.

எந்தவொரு திட்டத்தையும் முன்னெடுக்கும்போது இவ்வாறு சிக்கல்கள் தோன்றும்" - என்றார். (இ)

## முல்லைத்தீவில்...

யிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணியில் இருந்த குப்பைகளைக் கூட்டி நெருப்பு வைத்தபோது அதிலிருந்த குண்டு வெடித்ததில் குறித்து அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

அம்மன் கோயில் வீதி, 5ஆம் வட்டாரம் , இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்துவரும் 64 வயதுடைய இந்திரன் மரியரெத்தினம் எனும் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த பகுதியில் வேறு வெடிபொருட்கள் இருக்கின்றதா என்பது தொடர்பிலும் அவர்கள் ஆராய்ந்தனர். (இ)

ஈழநாடு
Eelanadu

# இந்தியாவின் ‘டெல்டா’ வகை கொரோனா வைரஸ் மீனவர்கள் மூலம் இலங்கையில் பரவும் அபாயம்!

## வைத்திய சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 16**

**இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் பரவி வரும் “டெல்டா” வகை கொரோனா வைரஸ் மிகவும் ஆபத்தானது என இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.**

இலங்கை மீனவர்கள் குறிப்பாக இந்திய மீனவர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்ப்பதன் மூலம் இந்த வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு, விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஊடாக நாநாட்டுக்கு வைரஸ் பரவாமல் இருப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் பரவும் பி.1.617 (டெல்டா) கொரோனா வைரஸ் திரிபுடன், வஸ்கடுவையில் உள்ள தனிமைப் படுத்தல் முகாமில் இரண்டாவது இலங்கையர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்திருந்தார்.

“டெல்டா“ கொரோனா வைரஸ் வகை என்பது, பி.1.617.2 கொரோனா வைரஸ் வகையாகும். இது ஒருவரிடமிருந்து 5 முதல் 8 பேருக்குப் பரவல் அடைகின்றது.

“ஆல்பா“ வைரஸ் வகையை விடவும் 50 வீதம் அதிகமாக இந்த வைரஸ் பரவக்கூடியது என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் வைரஸ் பரிணாம வளர்ச்சியை ஆராயும் மருத்துவர் அரிஸ் கட்ஸொராகிஸ் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தியாவில் இரண்டாம் அலை கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்குக் காரணமான இந்த “டெல்டா“ வகை வைரஸ், மேலும் உருமாறி “டெல்டா பிளஸ்“ ஆக தோன்றியுள்ளது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். (இ)

‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ கப்பலின்

# இலங்கை முகவரை உடனே கைதுசெய்க

## சட்டமா அதிபர் உத்தரவு

தீ விபத்துக்குள்ளான “எக்ஸ் - பிரஸ் பேர்ள்” கப்பலின் இலங்கை முகவரைக் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார். கப்பலின் இலங்கைக்கான முகவர் நிறுவன பிரதானியை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றிய கப்பல் அனர்த்தம் தொடர்பில் 33 வாக்குமூலங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

கப்பலுடன் தொடர்புபட்ட இலங்கை முகவர் உட்பட அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கப்பலின் கறுப்புப் பெட்டியை ஆராய்ந்து வருவதாகவும், கறுப்புப் பெட்டியில் கப்பலின் இயக்கம், தகவல் பரிமாற்ற தகவல்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கப்பலின் தலைமை மாலுமி நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு, 20 இலட்சம் ரூபா தனிநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கை உள்ளிட்ட ஏழு நாடுகளுக்கான பயணத் தடையை நீடித்தது பிலிப்பைன்ஸ்

கொழும்பு, ஜூன் 16

இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் இருந்து பயணிகள் தமது நாட்டுக்கு வருவதற்கான தடையை ஜூன் 30 ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸ் நீடித்துள்ளது.

இந்தியாவில் பரவும் புதிய வகை கொரோனா அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, பிலிப்பைன்ஸ் அரசு மே மாதம் 7ஆம் திகதி முதல் ஜூன் 14ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் குறித்த நாடுகளுக்கு மே 6ஆம் திகதி பயணத் தடையை அறிவித்தது.

இந்நிலையில், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டூர்ட்டே தீவிரமான பரவல் அடையும் புதிய வகை கொரோனாத் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் பயணக் கட்டுப்பாடுகளை நீட்டிக்க ஒப்புதல் அளித்துள்ளார்.

ஏப்ரல் 29 முதல் இந்தியா மீது பிலிப்பைன்ஸ் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தது. மே 7 முதல் இலங்கை, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் பயணத் தடை விரிவுபடுத்தப்பட்டது.

மே 15 முதல் ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளையும் பிலிப்பைன்ஸ் பயணத் தடைப் பட்டியலில் சேர்த்தது.

பிலிப்பைன்ஸில் நேற்றுமுன்தினம் திங்களன்று பதிவான தரவுகளின்படி, 13 இலட்சத்து 22 ஆயிரத்து 53 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 22 ஆயிரத்து 845 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கையர்களுக்கான தடை நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 16

இலங்கை மற்றும் பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் நாடுகளிலிருந்து பயணிக்கும் பயணிகள் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி வரை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குள் நுழைய முடியாது என்று எட்டிஹாட் ஏர்வேஸ் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 14 நாட்களில் குறித்த நாடுகளுக்கு பயணம் செய்தவர்களும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நுழைய முடியாது என்று அபுதாபியை தளமாகக் கொண்ட விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கொரோனாவால் பலியான 605 பேரின் சடலங்கள் ஓட்டமாவடியில் நல்லடக்கம்



கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் இதுவரை கொரோனாவால் உயிரிழந்த 605 பேரின் சடலங்கள் கடந்த 4 மாதங்களில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அரசால் அனுமதிக்கப்பட்ட ஓட்டமாவடிப் பகுதியில் குறித்த சடலங்கள் புதைக்கப்பட்டன எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் நோற்றுமுன்தினம் மாலை வரை 2 ஆயிரத்து 260 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் 572 முஸ்லிம்கள், 14 இந்துக்கள், 12 கிறிஸ்தவர்கள் மற்றும் 7 பௌத்தர்களின் சடலங்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் நீண்ட நாட்களாகக் கொரோனாவால் உயிரிழந்த தமது உறவுகளின் உடல்களை அடக்கம் செய்யக் கோரி சிறுபான்மை மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

தேசிய மற்றும் சர்வதே அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கை அரசு கொரோனாவால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்கியது.

கொரோனா காரணமாக இறந்தவர்களின் உடல்கள் எவ்வாறு பாதுகாப்பாக கையாளப்பட வேண்டும் என்பது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

இதற்கமைய உலகெங்கிலும் 190 இற்கும் மேற்பட்ட நாடுகள் கொரோனாவால் உயிரிழப்பவர்களை தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கு அனுமதித்துள்ளன. (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*



*6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்*
*6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய ராசி பலன்*
*7.15 மணி : கதை வழி அறமொழி*
*வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு*



*7.20 மணி : சித்த மருத்துவம்*
*வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்*
*7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை-நேரலை*
*10.30 மணி : தொடர்நாடகம்*
*11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)*
**பகல்**
*12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை*



*1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )*
*1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சுறா,வேங்கை*
*திரைப்படங்களின் காட்சிகள்*
*4.30 மணி : குட்டீஸ் தர்பார்-*
*சிறுவர் நேரலை நிகழ்ச்சி*



*5.30 மணி : குறுந்திரை நேரம்*
*6.00 மணி : டொப் 10 மூவீஸ்-10*
*திரைப்படங்களின் தரவரிசை*
**இரவு**
*7.00 மணி : பாரதீ*
*8.00 மணி : இரவுச் செய்திகள்*
*9.00 மணி : துறைக்கு அப்பால்*
*10.00 மணி : நேருக்கு நேர்*

## DAN COMEDY HD

**காலை**
*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : திரைப்படம்*
**பகல்**
*1.00 மணி : நகைச்சுவை மன்னன்*
*வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : திரைப்படம்*
*6.00 மணி : கொமடி கலாட்டா*
**இரவு**
*8.00 மணி : திரைப்படம்*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

## DAN MUSIC HD

**காலை**
*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*
**பகல்**
*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஒய்வெடு நிலவே*
**இரவு**
*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

## கல்வி tv CHANNEL-1

**காலை**
*5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்*
*6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்*
*6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்*
*7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்*
*8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்*
**பகல்**
*12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு*
*1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்*
*2.00 மணி : தரம் 5 சுற்றாடல்*
*3.00 மணி : தரம் 5 கணிதம்*
*4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்*
*5.00 மணி : பொது சிங்களம்*
*6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*
**இரவு**
*7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்*

## சிவா / ஓம் நிதி

**காலை**
*5.00 மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*07.00 மணி : இன்றைய சிந்தனை*
*07.05 மணி : இன்றைய நாள்*
*07.30 மணி : மங்கள இசை*
*08.00 மணி : அருளுரை*
*08.30 மணி : திருவாசகம்*
*09.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பாடல்கள்*
*10.30 மணி : பஜனை*
*11.00 மணி : பக்திமலர்*
**பகல்**
*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*
**இரவு**
*7.00 மணி :செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*

## CHANNEL HOLY MARY

**காலை**
*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்*
*8.00 மணி : ஜெபமாலை*
*9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்*
*09.30 மணி : மன்றாடு*
*10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*11.30 மணி : ஜெபமாலை*
**பகல்**
*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*02.00 மணி : நற்சிந்தனை*
*03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)*

## Pirai Television

**காலை**
*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்*
*8.00 மணி : சற் வித் குட்டீஸ்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : வேர் கொள்*
*11.00 மணி : மனிதம்*
*11.30 மணி : சுக வாழ்வு*
**பகல்**
*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : அன்னிஸா*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்*
*5.00 மணி : சற் வித் குட்டீஸ்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*
**இரவு**
*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : பாடல்*
*8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்*
*9.00 மணி : Bayan*
*10.00 மணி : சீரிஸ்*
*10.30 மணி : கலந்துரையாடல்*